வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria Money Transfer — றியா பணப்பரிமாற்றம்
Western Union Money Transfer — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 12.02.2022 சனிக்கிழமை | இதழ் : 69 | பக்கங்கள் : 16

## படகுகள் பழுதால் நெடுந்தீவுக்கான போக்குவரத்து சேவைகள் பாதிப்பு!

குறிகாட்டுவான், பெப். 12

நெடுந்தீவுக்கான பொதுப் போக்குவரத்தில் ஈடுபட்டு வந்த குமுதினி, நெடுந்தாரகை படகுகள் பழுதடைந்து நீண்ட நாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதனால், நெடுந்தீவு மக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து 45கிலோ மீற்றர் தொலைவில் தரை வழித் தொடர்பு கொண்ட புங்குடுதீவின் குறிகாட்டுவானிலிருந்து ஏறத்தாழ 10கடல் மைல் தொலைவில் நெடுந்தீவு அமைந்துள்ளது. இங்கு 1500 க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 4500 பேர் வரையில் வசித்து வருகின்றனர்.

இந்த மக்கள் படகு சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளமையால் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதேபோன்று, இங்கு பணியாற்றும் ஆசிரியர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் 15

## தொற்றுக்கு 31 பேர் பலி!

கொழும்பு, பெப். 12

நாட்டில் நேற்றுமுன்தினம் கொரோனா தொற்றால் மேலும் 31 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில், 30 தொடக்கம் 59 வயதுக்கு இடைப்பட்டவர்களில் 4 15

## இராவணன் தொடர்பில் முறையான ஆய்வு தேவை!

### ஐக்கிய மக்கள் சக்தி பிரேரணை

கொழும்பு, பெப். 12

இலங்கை மன்னன் இராவணன் தொடர்பாக உறுதியான வரலாற்றுச் சான்றுகள் இல்லாமையால் இராவணன் தொடர்பாக முறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான புத்திக பத்திரணவினால் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான புத்திக பத்திரண முன்வைத்துள்ள இந்த பிரேரணை பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்கப் 15

## எந்த நிதி உதவியையும் இலங்கை கோரவில்லை!

### சர்வதேச நாணய நிதியம் அறிவிப்பு

கொழும்பு, பெப். 12

இலங்கை அரசாங்கம் இதுவரையில் எவ்வித நிதி உதவியையும் கோரவில்லை என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. இலங்கையிலிருந்து நிதி உதவிக்கான எவ்வித கோரிக்கையும் முன்வைக்கப்படவில்லை. எனினும், தாம் இலங்கையுடன் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு தயாராகவுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஜெரி ரைஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்திகளை தாம் 15

## ஜனாதிபதிக்கு எதிராக நேற்று வவுனியா நகரில் போராட்டம்!

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கொந்தளிப்பு





வவுனியா, பெப்ரவரி 12

**ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தை பொலிஸார் தடுத்து நிறுத்தியமையால் வவுனியா-மன்னார் பிரதான வீதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டதுடன், பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.**

வவுனியா பல்கலைக்கழகத்தின் ஆரம்ப விழா நிகழ்வு பம்பைமடுப் பகுதியில் அமைந்துள்ள பல்கலைக் கழக வளாகத்தில் ஜனாதிபதியின் தலைமையில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதன்போது ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து பல்கலைக்கழகத்துக்கு முன்பாக காணாமல்போனவர்களின் உறவினர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆர்ப்பாட்டம் இடம்பெறவிருந்த பகுதிக்கு செல்ல முற்பட்ட காணாமற்போனவர்களின் உறவினர்களை பம்பைமடு இராணுவச் சோதனைச் சாவடியில் குவிக்கப்பட்டிருந்த 15

## நாட்டில் 95 சதவீதமானோர் தடுப்பூசியை பெற்றுள்ளனர்!

### சுகாதார அமைச்சர் பெருமிதம்!

கொழும்பு, பெப். 12

உலகில் சில நாடுகள் இன்னும் தடுப்பூசி வழங்கும் பணிகளை ஆரம்பிக்காத நிலையிலும்கூட, இலங்கையில் 95 சதவீதமானோருக்கு, குறிப்பாக சிறுவர்களில் 98 சதவீதமானோருக்கு தடுப் 15

## யாழ். தேர்தல் மாவட்டத்தின் ஆசனங்கள் மீண்டும் 7 ஆகின!

கொழும்பு, பெப். 12

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை 7ஆக உயர்ந்துள்ளதாக வர்த்தமானி அறிவித்தல் வெளியாகி 15

## இதயபூமியை காக்க இன்று போராட்டம்!

கொக்கிளாய், பெப். 12

இதயபூமி என்று சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்கும் பகுதியான கொக்கிளாய் முதல் நாயாறு வரையான நிலங்களை காப்பாற்ற இன்று சனிக்கிழமை பெரும் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கொக்கிளாய் பாடசாலை முன்பாக இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறும் இந்தப் போராட்டத்தில் சகலரையும் கலந்துகொள்ளுமாறு கொக்கிளாய் எல்லைக் கிராம மக்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

கொக்கிளாய் பகுதிகளில் தமிழ் மக்களுக்கு சொந்தமான பாரம்பரிய நிலங்களை கனிய மணல் அகழ்வு எனும் போர்வை 15

## அத்தியாவசிய பொருட்கள் போதியளவு கையிருப்பில்!

### 4 பொருட்களுக்கே சிறியளவில் தட்டுப்பாடு என்கிறார் பஸில்

கொழும்பு, பெப். 12

நாட்டில் அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் போதுமான அளவு கையிருப்பு இருக்கின்றன என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நுகர்வோருக்கு அத்தியாவசிய பொருட்களை தட்டுப்பாடின்றி வழங்குவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுடனான சந்திப்பின் போதே நிதியமைச்சர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

எனினும். பால் மா, எரிவாயு, கோதுமை மா 15



நாட்டின் 17 ஆவது பல்கலைக்கழகமான வவுனியா பல்கலைக் கழகத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று திறந்து வைத்தார். (தொடர்புடைய செய்திகள் பக்கம் 10 இல்)

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

நண்பர் ஒருவர் புதிய சுவர்க் கடிகாரம் ஒன்றை வாங்கி வந்தார்.

அதை சுவரில் மாட்ட ஆணி அடிக்க அவரிடம் சுத்தியல் இல்லை. பக்கத்து வீட்டுக்காரரிடம் இரவல் கேட்க வேண்டும். நேரம் இரவாகிவிட்டது. இந்நேரம் போய் கேட்பது சரியல்ல, மறுநாள் காலையில் கேட்கலாம் என நினைத்து தூங்கச் சென்றார்.

மறுநாள் காலை எழுந்ததும் கடிகாரம் நினைவுக்கு வந்தது. பக்கத்து வீட்டுக்காரரிடம் சுத்தியல் கேட்க எண்ணிய போது, அன்று வெள்ளிக்கிழமை என்பது நினைவுக்கு வந்தது! இன்று போய் கேட்டால் ஏதாவது நினைத்துக் கொள்வாரோ? என எண்ணி, அன்றும் சுத்தியல் வாங்கவில்லை!

மறுநாள் போய் கேட்க முடிவுசெய்து பக்கத்து வீட்டை நெருங்கினார். பக்கத்து வீட்டில் நிறைய விருந்தினர்கள் வந்திருப்பதை பார்த்துக் கேட்காமலே திரும்பினார்.

இப்படி பல காரணங்களினால் ஒரு வாரமாகியும் அவரால் வாங்கிய கடிகாரத்தை மாட்ட முடியவில்லை!

கடிகாரம் அவரைப் பார்த்து சிரிப்பதுபோல இருந்தது. உடனே, விடுவிடு என பக்கத்து வீட்டுக்கு சென்றார். பக்கத்து வீட்டுக்காரரைப் பார்த்து, “உன் சுத்தியலை நீயே வைத்துக்கொள்! எனக்கு தேவையில்லை. பொல்லாத சுத்தியல்! நீ மட்டும்தான் சுத்தியல் வைத்திருக்கிறாயா?” என கோபமாக கத்தினார். பக்கத்து வீட்டுக்காரருக்கு ஒன்றும் புரியவில்லை! பரிதாபமாக அவரைப் பார்த்தார்.

நம்மில் பலரும் இப்படித்தான் மனதில் உள்ளதை தெளிவாக பேசாமல், மனதில் ஒன்றை வைத்து பேசி பிரச்னைகளுக்கு காரணமாகி விடுகின்றோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற மாபெரும் இயக்கம் ஒருகாலத்தில் தமிழ் மக்களின் இதயமாக திகழ்ந்த ஒன்று.

இரு துருவங்களாக இருந்த ஜி. ஜி. பொன்னம்பலமும், தந்தை செல்வாவும் தனித்தனியாக அரசியல் செய்வதால் தமிழ்மக்களுக்கு எந்த பயனும் இல்லை என்பதை உணர்ந்த கொண்டு, தத்தமது கடைசிக் காலத்தில் இருவரும் இணைந்து உருவாக்கிய கட்சி அது. தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உதயசூரியன்போல கூட்டணியின் உதயசூரியன் சின்னம் என்பதும் ஒரு முக்கிய குறியீடாக திகழ்ந்தது ஒரு காலத்தில்.

இன்று ஆனந்தசங்கரி ஐயாவின் தனிப்பட்ட சொத்துப் போல அவரால் மட்டுமே நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

கட்சியின் தலைமைப் பொறுப்பை எடுங்கள் என்று அவர் விக்னேஸ்வரனை நோக்கி ஒருதடவை அல்ல பல தடவை அழைப்பு விடுத்தார். அதன் அர்த்தம் கட்சியை அவரிடம் ஒப்படைத்துவிட்டு நான் ஒதுங்குகின்றேன் என்பதல்ல. தான் செயலாளர் நாயகமாக தொடர்கின்றேன். நீங்கள் தலைவராக வாருங்கள் என்பதே அதன் அர்த்தம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கொள்கையிலிருந்து பிறழ்கிறது என்று குற்றம்சாட்டிக்கொண்டு அதிலிருந்து வெளியே வந்த ஒருவரை தனது கட்சியில் சேருங்கள் என்று அழைக்கின்றபோது அது அவரால் ஏற்கப்படுமா என்பதை அறிந்து கொள்ள முடியாத அளவுக்கு சங்கரி ஒன்றும் அரசியல் தெரியாதவரல்ல. ஆனாலும் அவர் அழைப்பு விடுத்தார்.

அண்மைக் காலமாக அவரோடு இருந்த கொஞ்சப்பேரும் அவரை ஒதுங்கிக் கொள்ளுங்கள், நாங்கள் கட்சியை வழிநடத்திச் செல்கிறோம் என்று அவரிடம் கோரிக்கை விடுத்தனர். அவர் அதற்கு சம்மதிக்கும் நிலையில் இல்லை. இதனால் கட்சியைப் பாதுகாக்க தனியாகக் கூட்டத்தைக் கூட்டி புதிய நிர்வாகிகளை தெரிவுசெய்தனர். அவர்கள் கூட்டிய அந்தக் கூட்டம் சட்டபூர்வமானது அல்ல, அது சட்டவிரோத கூட்டம் என்று அறிவித்துவிட்டு சங்கரி ஐயா அமைதியாகத் தொடர்கின்றார்.

அவர் தனது காலத்தில் எந்த மாற்றத்தை செய்வதானாலும், கட்சியின் மத்திய செயல்குழுவை கூட்டி அதன் அனுமதியுடனேயே செய்யவேண்டும். அதற்கு அதிலுள்ள சுமார் நூறுபேரில் பெரும்பான்மையினரின் அனுமதியைப் பெற வேண்டியிருக்கும்.

தந்தை செல்வாவால் தொடங்கப்பட்ட அந்த மாபெரும் இயக்கம் இப்படியே சிதைந்து போவதை அனுமதிக்கப் போகிறாரா? அல்லது அதனை மீண்டும் தமிழ்த் தேசிய நீரோட்டத்தில் ஓடும் கப்பலாக மாற்றப் போகின்றாரா என்பதை சங்கரி ஐயா விரைவாக முடிவெடுக்கவேண்டும். இல்லையேல் வரலாறு அவரை மன்னிக்காது.

ஆகக்குறைந்தது, அவர் தன் மனதில் என்ன யோசனையை கொண்டிருக்கிறார் என்பதையாவது வெளிப்படையாக தெரிவிக்கவேண்டும். இல்லையேல் மேலே சொன்ன சுத்தியல் கதையாகிவிடும்!

- ஊர்க்குருவி

# சுமந்திரன் எம். பியின் ஏற்பாட்டில் எதிர்க்கட்சிகள் இரகசிய சந்திப்பு

## இராஜாங்க அமைச்சர் செஹான்

கொழும்பு, பெப். 12

தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் ஏற்பாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இரகசியமாக நடத்திய கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் ஏற்பாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட எதிர் கட்சிகள் இரகசியமாக அண்மையில் நடத்திய கூட்டத் தில் பேசப்பட்ட விடயங்கள் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

எப்போதும் பயங்கரவாதத் திற்கு ஆதரவாகவே செயல்படும் இத்தகைய குழுவின் பேச்சு நாட்டுக்கு நன்மை பயப்பதாக ஒருபோதும் அமைய முடியாது.

மக்கள் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதை அதைரியப்படுத்தும் நடவடிக்கைகளில் எதிர்க்கட்சி ஈடுபட்டு வருகின்றனர்.

நாட்டின் பொருளாதாரம் பற்றியும் அதனை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும் என்பது தொடர்பிலும் எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா சபையில் தெரிவித்தார்.

இன்று நீங்கள் கூறுவதை ஏன் உங்கள் நல்லாட்சி அரசாங்கத்தில் அதனை நடைமுறைப் படுத்தவில்லை என்பதே எமது கேள்வியாகும். நாட்டின் பொருளாதார நெருக்கடி 2015 ஆம் ஆண்டு நடுப்பகுதியிலேயே ஆரம்பித்துவிட்டது.

2014 ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை சிறந்த பொருளாதார பின்னணியை மகிந்த ராஜபக்ச அரசாங்கம் நாட்டில் முன்னெடுத்திருந்தது. நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ஒரே வருடத்தில் இரண்டு முறை மத்திய வங்கி நிதி மோசடி இடம்பெற்று நாட்டின் முழுமையான பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்தது.

அரசாங்கம் அனைத்து நெருக்கடிகளிலிருந்தும் நாட்டை மீட்டெடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று காலத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகிப்பது நாட்டின் பெரும் அதிர்ஷ்டமாகும்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் இந்த தொற்று ஏற்பட்டிருந்தால் நிலைமை என்னவாகியிருக்கும் - என்றார்.

## நூலகம் நிறுவனத்தின் இணையவழி நிகழ்ச்சி!

யாழ்ப்பாணம், பெப். 12

நூலகம் நிறுவனத்தால் நிகழ்த்தப்படும் இணைய வழி நிகழ்ச்சித் தொடர் வரிசையில் 29 ஆவது நிகழ்வாக “இலக்கிய இலக்கண விளக்கத்தில் “திராவிட பிரகாசிகை“ பெறும் முக்கியத்துவம்” எனும் தலைப்பிலான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் இந்தக் கலந்துரையாடலை சண்முகம் இந்திரகுமார் நிகழ்த்தவுள்ளார். ஒருங்கிணைப்பாளராக வேலு இந்திரச்செல்வன் செயல்படவுள்ளார்.

இதில் பங்கேற்க விரும்புபவர்கள் சூம் செயலியின் 81415584070 என்ற அடையாள எண்ணைப் பயன்படுத்தி இணைந்து கொள்ள முடியும். (ஐ)

## ‘யாவர்க்கும் நலம்’ கருத்தமர்வில் இன்று

யாழ்ப்பாணம், பெப். 05

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகு பிரதி சனிக்கிழமைகளில் நடத்தும் ‘யாவர்க்கும் நலம்’ மெய்நிகர் வழி நிகழ்வில் இன்று சனிக்கிழமை ‘சருமம் மற்றும் கேசப் பராமரிப்பு’ எனும் தலைப்பில் கருத்தமர்வு இடம்பெற வுள்ளது.

இதில், கேசப் பராமரிப்பு, சுய சருமப் பராமரிப்பும் பொலிவுபடுத்தலும், அழகியல் கலை கற்கைநெறிகள் தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட வுள்ளன.

இன்றிரவு 7 மணி தொடக்கம் 9 மணி வரை இடம்பெற வுள்ள இந்தக் கருத்தமர்வில் பங்கேற்க விரும்புவோர் சூம் செயலி மூலம் 899 8528 2023 என்ற அடையாள எண் மூலம் 354485 என்ற கடவுச் சொல்லைப் பயன்படுத்தி இணைந்து கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ‘காதலுக்காக ஒரு செடி’ திட்டம் சுற்றுச்சூழல் அமைச்சு அறிமுகம்!

கொழும்பு, பெப். 12

காதலர் தினமான எதிர் வரும் 14 ஆம் திகதி ‘காதலுக் காக ஒரு செடி’ என்ற கருப் பொருளில் மரம் நடும் திட் டத்தை அறிமுகப்படுத்த சுற்றுச் சூழல் அமைச்சு முடிவு செய் துள்ளது.

சுற்றாடல் அமைச்சு, பாதுக்கை பசுமைப் பல்கலைக் கழகம், இலங்கை தொழில்நுட்ப பல்கலைக்கழக வளாகம் மற்றும் இலங்கை அபிவிருத்தி அறக்கட்டளை ஆகியன இணைந்து இந்த மர நடுகை நிகழ்ச்சியை காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளன.



## கப்பல்துறை வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சு செயலர் விஜயம்!

திருகோணமலை, பெப். 12

திருகோணமலை - கப்பல் துறை பஞ்சகர்ம ஆயுள்வேத வைத்தியசாலைக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே. முரளிதரன் நேற்று விஜயம் மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின்போது, கப்பல்துறை பஞ்சகர்ம ஆயுள் வேத வைத்தியசாலையில் நிலவுகின்ற குறைபாடுகள் மற்றும் பிரச்னைகள் குறித்தும் கேட்டறிந்துகொண்டார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த அவர், வைத்திய சாலையில் நிலவுகின்ற குறைபாடுகள் மற்றும் எவ்வகையான பிரச்னைகளாக இருந்தாலும் அவற்றை எனது பார்வைக்கு நேரடியாகவோ அல்லது ஆணையாளர் ஊடாகவோ கொண்டுவரும்போது அதற்கான தீர்வை மிகக்குறுகிய காலப் பகுதிக்குள்தான் செய்துதருவதாகவும் இதன்போது அவர் தெரிவித்தார்.

இந்த விஜயத்தில் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திவாகர சர்மா, கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் திருமதி இ.ஸ்ரீதர் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
12.02.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், தை 30

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# உலக ஒழுங்கு?

ரஷ்யா - அதன், படைகளை உக்ரைன் எல்லையில் குவித்திருக்கின்றது. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், உக்ரைனில் தங்கியிருக்கும் அமெரிக்கர்களை வெளியேறுமாறு அறிவித்திருக்கின்றார். எவவேளையிலும் போர் மூளலாம் என்னும் ஆபத்து உணரப்படுகின்றது. ஆனால், போர் செய்யும் நோக்கம் தமக்கில்லையென்று ரஷ்ய ஜனாதிபதி விலாடிமிர் புடின் அறிவித்திருக்கின்றார். 2014இல், உக்ரைனுக்கு சொந்தமான கிரீமியா பகுதியை, ரஷ்யா ஆக்கிரமித்திருந்தது. இப்போது மீண்டும் உக்ரைனை அச்சுறுத்துகின்றது. அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட மேற்கு நாடுகள் உக்ரைனுக்கு ஆதரவாக இருக்கின்றன.

உக்ரைனை நேட்டோ அணிக்குள் இணைக்கும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. இதனை எதிர்க்கும் நோக்கிலேயே ரஷ்யா உக்ரைன் எல்லையில் படைகளை குவித்திருக்கின்றது. உக்ரைன் நேட்டோவில் இணைக்கப்படுமாக இருந்தால், ரஷ்யாவின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகிவிடுமென்று, ரஷ்யா கருதுகின்றது. பேரம்பேசும் நோக்கிலேயே ரஷ்யா படைகளை நகர்த்தியிருக்கின்றது. ரஷ்யாவின் நகர்வில் யுத்தம் இறுதித் தெரிவாகவே இருக்கின்றது. நிச்சயம் யுத்தத்தை தவிர்க்கவே அனைத்துத் தரப்பினரும் முயற்சிப்பர். இது நமக்கெதற்கு என்னும் கேள்வி எழலாம். உண்மையில் இந்த விடயம் நமக்கு எதனை உணர்த்துகின்றது?

ரஷ்யா சர்வதேச சட்டத்தின் கீழா அதன் படைகளை உக்ரைன் எல்லையில் குவித்திருக்கின்றது? சர்வதேச சட்டங்களாக குறிப்பிடப்படும் விடயங்கள் இங்கு கருத்தில் கொள்ளப்பட்டதா? ஐக்கிய நாடுகள் சபையால் ரஷ்யாவை தடுக்க முடிந்ததா? இந்த அனைத்து கேள்விகளுக்குமான பதில் - இல்லை என்பது மட்டும்தான். ஏன் இங்கு சட்டங்கள் கருத்தில் கொள்ளப்படவில்லை?

பதில் மிகவும் சுலபமானது. அதாவது, வல்லரசுகள் சர்வதேச சட்டத்தின் கீழ் எந்தவொரு நடவடிக்கையையும் திட்டமிடுவதில்லை. தங்கள் இராணுவ பலத்தின் அடிப்படையில்தான் விடயங்களை தீர்மானிப்பர். இதன் மூலம் தங்களுக்கான நியமங்களை தாங்களே உருவாக்கிக் கொள்வர். தங்களுடைய தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கருதினால், எந்தவொரு சர்வதேச சட்ட விதிகளையும் இந்த நாடுகள் கருத்தில் கொள்ளாது. ஈரானின் அணுவாயுத திட்டத்தை அமெரிக்கா எதிர்த்து வருகின்றது. ஈரான் அணுவாயுத பலமுள்ள நாடாக மாறினால் இஸ்ரேலின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகிவிடும். இதனால், ஈரானின் அணுவாயுதத் திட்டத்தை முடக்குவதற்கான முயற்சிகளை இஸ்ரேல் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது? இந்த முயற்சியில் எந்தவொரு சர்வதேச சட்ட விதிக்கும் மரியாதையில்லை. ஈரானின் அணுவாயுத திட்டத்தில் பணியாற்றிய ஐந்து விஞ்ஞானிகள் இதுவரையில் கொல்லப்பட்டிருக்கின்றனர். ஈரானின் இரண்டாம் மட்ட தலைவரான ஜெனரல் காசிம் சுலைமானி அமெரிக்க ட்ரோன் தாக்குதலில் கொல்லப்பட்டார். இதன் மூலம் ஈரானின் திட்டங்கள் பத்து வருடங்களுக்கு பின்நோக்கி தள்ளப்பட்டன. இவற்றை ஐ.நாவால் தடுக்க முடிந்ததா - ஆகக் குறைந்தது, ஐ. நா. என்னும் ஒன்று இருப்பதுகூட, கருத்தில் கொள்ளப்பட்டதா? இங்கும் பதில் சுலபமானது - இல்லை.

இதிலிருந்து நாம் ஒரு விடயத்தை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். பலம்பொருந்திய அரசுகளின் தீர்மானத்தில்தான் இந்த உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இது பலவான்களின் உலகம். பலமில்லாதவர்களால் இங்கு எதனையும் செய்ய முடியாது. அதிலும் குறிப்பாக எங்களைப் போன்ற பலமில்லாத - அரசு இல்லாத, மக்கள் கூட்டங்களால் எதனையும் - அவர்களது விருப்பத்தின் அடிப்படையில், முன்னெடுக்க முடியாது. இந்த நிலையில் நமக்கு முன்னாலுள்ள தெரிவு ஒன்றேயொன்றுதான். அதாவது, பலம் பெருந்திய நாடுகளின் அணைவைப் பெற முயற்சிக்க வேண்டும். அது ஒன்றுதான் நமக்கு முன்னாலுள்ள ஒரேயொரு தெரிவாகும்.

இந்த பிராந்தியத்தைப் பொறுத்தவரையில் நமக்கு முன்னாலுள்ள ஒரேயொரு தெரிவு இந்தியா மட்டும்தான். இந்தியா நாம் எதிர்பார்ப்பதை செய்யாவிட்டால்கூட, இந்தியாவை தவிர்த்து, ஈழத் தமிழர்களால் எங்கும் செல்ல முடியாது. செல்ல முடியுமென்று கற்பனை செய்யலாம் ஆனால், நடைமுறையில் அந்த கற்பனைக்கு எந்தவொரு பெறுமதியும் இருக்கப் போவதில்லை. இதே வேளை, உலக அரசியல் ஒழுங்கில் அமெரிக்காவின் அணைவு அவசியம். ஆனால், இவைகூட, நாம் எதிர்பார்க்கும் நன்மைகளை நிச்சயம் தரப் போவதில்லை. குறிப்பிட்ட சூழலில் வாய்ப்புக்களாக தெரியும் விடயங்கள் - எப்போதும் வாய்ப்புக்களாக இருக்காது. ஏனெனில், நாம் இங்கு ஒரு தரப்பல்ல. ஒரு நாடு என்னும் வகையில் இலங்கை அரசாங்கம்தான் ஒரு தரப்பாக இருக்கின்றது. இதனை விளங்கிக் கொள்ளாமல் வெறும் எதிர்ப்பு கோஷங்களை முன்வைப்பதால், எந்தவொரு நன்மையும் தமிழ் மக்களுக்கு கிடைக்கப் போவதில்லை. அரசியலில் ஒரு கருத்துண்டு. அதாவது, ‘பேருந்தை தவறவிடுதல்’ - அதாவது வாய்ப்புக்களை தவறவிடுதல். ஒருமுறை பேருந்தை தவறவிட்டால் - பின்னர் பேருந்து வரும் வரைக்கும் நாம் காத்திருக்கத்தான் வேண்டும். ஒருவேளை பேருந்து வராமலும் போகலாம்.

# ‘அபயா’ சர்ச்சை!

-அலசுவது இராஜதந்திரி-

ஒரு வாரத்துக்கு முன்னர் திருகோணமலை ஸ்ரீண்முகா இந்து மகளிர் கல்லூரியில் பாத்திமா பாமிதா ரமீஸ் என்ற முஸ்லிம் ஆசிரியை அபயா என்ற இஸ்லாமிய பாரம்பரிய ஆடையணிந்து பாடசாலைக்கு வந்த விவகாரம் சரச்சையை ஏற்படுத்தி விட்டிருந்தது.

அந்த முஸ்லிம் ஆசிரியை இஸ்லாமிய பாரம்பரிய ஆடை அணிந்து வந்தமை காரணமாக அச்சுறுத்தப்பட்டோடு தாக்கப்பட் டார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ‘எழுத்தறிவித்தவன் இறைவன்’ என்பது ஓர் உயர்வான மகா வாக்கியமாகும். எனவே ஓர் அற்ப காரணத்துகாக அதுவும் ஒரு பெண் ஆசிரியையை இகழ்வது எவ்வகையிலும் நல்லதொரு பண்பாக இருக்கமுடியாது.

ஒருவருடைய தனித்துவமான ஆளுமை பற்றி குறிப்பிடுகையில் ‘ஆள்பாதி, ஆடை பாதி’ என்றே குறிப்பிடுவார்கள்.

இலங்கையில் உள்ள முன்னணி கல்வி நிறுவனங்கள் பலவும் மத மற்றும் அவற்றின் பிரதேச கலாசார பாரம்பரியங்களின் அடிப்படையில் தோற்றம் பெற்றவையாகவே இருக்கின்றன. அத்துடன், தமது தனித்துவங்களின் அடிப்படையிலான பாரம்பரியங்கள் பேணப்படவேண்டுமெனவும் எதிர்பார்க்கின்றன. இருந்தபோதிலும் அவ்வாறான தனித்துவமான அம்சங்களுக்கு சவாலாக குறுகிய இன, மத ரீதியான அடையாளங்கள் வெளிப்படுத்தப்படும்போது பாரம்பரியங்களை மதிக்கின்ற பாடசாலைகளில் சர்ச்சைகள் ஏற்படுகின்றன.

இதன் காணமாகவே ஓர் இந்து மகளிருக்கான பாடசாலையாக இருக்கின்ற ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் பாடசாலையில் ஆசிரியை ரமீஸ் என்ற ஆசிரியை இஸ்லாமிய பாரம்பரிய ஆடையான அபயா அணிந்து வந்துள்ளமை குழப்பத்தை ஏற்படுத்தி விட்டுள்ளது.

இஸ்லாமிய கலாசார விழுமியங்கள் என்பது மத்திய கிழக்கில் உள்ள நாடுகளில் தோற்றம் பெற்றவையாகும் அந்நாடுகளில் பெண்கள் மாத்திரமல்ல. ஆண்களும் முழு நீள ஆடைகளை அணிவதோடு தலையை மூடி தலைப்பாகை போல துணியால் கட்டியும் விடுகின்றனர்.

முகத்தையும் மூடி தலை முதல் கால்வரை மறைத்து ஆடைகளை அணிவதற்கான சமூகவியல் காரணமாக மத்திய கிழக்கில் காணப்படுகின்ற புவியியல் தன்மையே சுட்டிக் காட்டப்படுகின்றது.

மத்திய கிழக்கில் பெரும்பாலான பிரதேசங்கள் பாலைவனங்களாகவே இருக்கின்றன. இதன்காரணமாக அடிக்கடி மணல் புயல்கள் ஏற்படுவதன் காரணமாகவே உடம்பை மறைக்கின்ற முழு நீள ஆடைகள் அணியப்படுவது வழக்கமாக மாற்றமடைந்து நாளடைவில் அத்தகைய ஆடைகளுக்கு மத மற்றும் கலாசார ரீதியான பின்னணிகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

மத்திய கிழக்கு கிழக்கு நாடுகளில் வேலை பார்ப்பதற்கு இஸ்லாமியர்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட்ட நிலையில் அங்கு



இலங்கையின் அனைத்துப் புறங்களையும் சேர்ந்த முஸ்லிம்கள் மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றி நாடு திரும்பிய நிலையில் தமது கலாசார விழுமியங்கள் பின்பற்றப்பட வேண்டுமென்ற எதிர்பார்ப்புக்கு முக்கியத்துவமளித்திருந்தனர். இதன் காரணமாகவே அபயா ஆடை முஸ்லிம் பெண்களிடையே இலங்கையில் முக்கியத்துவம் பெறலாயிற்று.

இலங்கையில் உள்ள முஸ்லிம் பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகியோர் மத்திய கிழக்கின் செல்வாக்கு ஏற்படுவதற்கு முன்னர் அபயா போன்றல்லாது பாரம்பரிய தமிழ் பெண்களைப்போல சேலைகள் மற்றும் முழு நீள ஆடைகளையும் அணிந்திருந்தனர். ஆனால், இன்று அபயா ஆடை இலங்கையில் மாத்திரமல்ல. இரு தினங்களுக்கு முன்னர் இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் பாரம்பரிய முஸ்லிம் ஆடை அணிந்து வந்த மாணவிகள் பலர் அச்சுறுத்தப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன.

அபயா ஆடையை இஸ்லாமிய பெண்கள் அணிவதை ஆப்கானிஸ்தானும், ஈரானும் கட்டாயப்படுத்தியுள்ளன. ஆனால், சவுதி அரேபியா அபயா ஆடை அணிவதை கட்டாயப்படுத்தவில்லை. இதுதவிர பலஸ்தீனத்திலும் அபயா அணிவது கட்டாயப்படுத்தப்படவில்லை. ஐரோப்பாவில் பிரான்ஸ் உட்பட பதினாறு நாடுகள் அபயா அணிவதற்கு தடைவிதித்துள்ளன.

இந்நிலையில், இனம், மதம் , சாதி , நிறம், பிரதேசம் என்று மானிட குலத்தில் வேற்றுமைகள் துளிர்விட்டுப்பெரும் சர்ச்சைகளாக அவை வெடித்திருந்ததே வரலாறாக இருக்கின்ற நிலையில் ஆடை , அணிகலங்கள் வாயிலாகவும் வேற்றுமைகள் தோன்றுவது மானிட சமூகம் ஒரு குறுகிய வட்டத்தினுள் சுழன்று கொண்டிருப்பதையே எடுத்துக்காட்டு கின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**பெப்ரவரி - 12 சனிக்கிழமை**
பிலவ வருடம் - தை 30
நல்ல நேரம் : 7.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : ஏகாதசி




**மேடம்**
யாரிடமும் அளவுக்கு அதிக நட்பைத் தவிர்க்க வேண்டும். நண்பர்களைத் தொடர்பு கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். நெருக்கமானவர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும்.

**இடபம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். கூடுதலாக உழைத்து பலன் பெறுவீர்கள். கவலை தீரும். குழந்தைகளால் சிறு பெருமிதம் ஏற்படும். குடும்பத்தினருடன் அனுசரித்து சென்று நன்மை காண்பீர்கள்.

**மிதுனம்**
சக பணியாளர்களால் தற்காலிகப் பிரச்னை ஒன்று ஏற்படும். வரவு சுமாராக இருந்தாலும் முன்பைவிட நன்றாயிருக்கும். திடீர் நட்பு உருவாகலாம். வேலைப்பளு அதிகரிக்கும்.

**கடகம்**
பணத்தை கவனமாக கையாளுவதால் பிரச்னை இருக்காது. நண்பர்கள் இடையே கொடுக்கல் வாங்கலைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பார்த்த வங்கி கடன் கிடைக்கும். பேச்சினால் நன்மை உண்டாகும்.

**சிம்மம்**
நேர்மறை எண்ணங்கள் அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும். மனதை அரித்துக்கொண்டிருந்த கவலை ஒன்று முடிவுக்கு வரும். வருமானம் கூடும். பழைய பிரச்னை ஒன்று தீரும்.

**கன்னி**
குடும்பத்தில் முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்த்து விடவும். பயணத்தை ஒத்திப்போடுவது நல்லது. மூத்தோர் உதவி செய்வர். முக்கியப் பொருட்களை கவனமாகப் பார்த்துக் கொள்ளவும்.

**துலாம்**
கூடுதலாக உழைத்து உயரதிகாரியின் பாராட்டை பெறுவீர்கள். தந்தைக்கு நன்மை ஏற்படும். எதிர்பாராத லாபம் உண்டு. குடும்பத்தில் சிறு சங்கடம் உண்டு. பாதிப்பு இருக்காது

**விருட்சிகம்**
சுற்றியிருப்பவர்களுடன் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும். யாருடனும் வம்பு வேண்டாம். கடன் தருவதை தவிர்த்துவிடுங்கள். உங்களின் நலம் நாடும் ஒருவர் பயனுள்ள ஆலோசனை தருவார்.

**தனுசு**
எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். மனதில் தேவையற்ற கற்பனை பயங்களை வளர்த்துக் கொள்ள வேண்டாம். நிதானமும் பொறுமையும் இருந்தால் வெல்வீர்கள்.

**மகரம்**
நல்ல செய்தி வரும். நேர்மறை சிந்தனை அதிகரிக்கும். கவலைகள் தீரும். மனதில் மகிழ்ச்சி ஏற்படும். குடும்பத்தில் சந்தோஷம் பெருகும். வீடு களை கட்டும்.

**கும்பம்**
எதிர்பாராத பணவரவு உண்டாகும். பணியில் கவனம் தேவை. உங்களுக்கு நன்மைகள் கிடைப்பதை யாரும் தடுக்க முடியாது. பணியாளர்கள் இன்று சிறிதளவு கவலைப்பட நேரிடலாம்.

**மீனம்**
உடல்நிலை பாதிப்புகள் வராமல் காத்துக் கொள்ளுங்கள். ஆரோக்கியமான உணவுகளை எடுத்துக்கொள்வது நல்லது. நண்பர் ஒருவரால் நலம் அளிக்கும் விஷயம் நடைபெறும்.

# 22 அணு உலைகளின் கழிவுகளை கூடங்குளத்தில் குவிக்க முயற்சி!

## மத்திய அரசுக்கு வைகோ கண்டனம்

சென்னை, பெப். 12,

இந்தியாவில் செயல்பட்டு வரும் 22 அணு உலைகளின் கழிவுகளையும் கூடங்குளத்தில் குவிக் கும் அபாயகரமான திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசு முனைந்து இருப்பது கடும் கண்டனத்துக்குரியது என ம.தி.மு.க. பொதுச்செயலா ளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

கூடங்குளத்தில் அணுஉலை வளாகத்தினுள் அணுக்கழிவு மையத்தை அமைத்து, அதில் கூடங்குளம் மட்டுமின்றி,



இந்தியாவில் செயல் பட்டு வரும் 22 அணு உலைகளின் கழிவுகளை யும் கொண்டுவந்து குவிப்பதற் கான அபாயகரமான திட்டத் தைச் செயல்படுத்த மத்திய அரசு முனைந்து இருப்பது கடும் கண்டனத்துக்குரியது.

மத்திய அரசின் இத்தகைய முயற்சிகளை முறியடிப்பது டன், கூடங்குளத்தில் அணு உலை 3வது மற்றும் 4ஆவது அலகுகள் அமைத்திடமாகக் கட்டுப்பாட்டு வாரியம் அளித்த அனுமதியையும் நிறுத்தி வைக்க தமிழக அரசு நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும். கூடங்குளத்தில் எக்கார ணத்தைக் கொண்டும் அணுஉலைக் கழிவுகளை கொண்டுபோய் சேமித்து வைக் கும் திட்டத்தைச் செயல்படுத்த அனுமதிக்கக் கூடாது என்று வலியுறுத்துகிறேன்."

- இவ்வாறு வைகோ தெரிவித்தார்.

# ஜெயலலிதா மரணம் குறித்த விசாரணைக்கு உதவ 'எய்ம்ஸ்' அமைத்துள்ள மருத்துவ குழு

சென்னை, பெப். 12,

உச்சநீதிமன்ற வழிகாட்டுத லின் படி ஜெயலலிதா மரணம் குறித்து விசாரித்து வரும் ஆறுமுகசாமி ஆணையத்திற்கு உதவ எய்ம்ஸ் மருத்துவமனையை சேர்ந்த மருத்துவக்குழு தற்போது அமைக்கப்பட்டுள்ளது.

ஜெயலலிதா மரணம் தொடர்பான விசாரணை நடத்தும் ஆறுமுகசாமி ஆணையத் திற்கு உதவ, மருத்துவக் குழுவை அமைக்குமாறு எய்ம்ஸ் மருத் துவமனைக்கு கடந்த மாதம் உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப் பித்திருந்தது. இந்த உத்தரவு கடந்த டிசம்பர் மாதம் 20ம் தேதி உச்ச நீதிமன்றத்தால் பிறப் பிக்கப்பட்டது.

இதையடுத்து எய்ம்ஸ் மருத்துவர் நிகில் டாண்டன் தலைமையில் 6 பேர் கொண்ட மருத்துவர்கள் குழு தற்போது எய்ம்ஸ் சார்பில் அமைக்கப்பட் டுள்ளது. இந்த மருத்துவக் குழுவில் ஒரு கண்காணிப் பாளர், ஒரு உறுப்பினர், செய லர் என்று மொத்தம் 8 பேர் இடம் பெற்றுள்ளனர்.

குழுவில் இடம்பெற்றுள்ள அனைவரும் ஜெயலலிதா வுக்கு வழங்கப்பட்ட சிகிச்சை தொடர்பான துறை ரீதியிலான வல்லுநர்கள் ஆவர். எய்ம்ஸ் சார்பில் மருத்துவக்குழுவை அமைக்கப்பட்டுள்ள நிலை யில், ஆணையத்தின் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து மருத்து வர்களுடன் ஆறுமுகசாமி விசாரணை ஆணையம் வரும் 16ஆம் தேதி ஆலோசனை மேற் கொள்ள திட்டமிட்டுள்ளது.

# கீழடி 8ஆம் கட்ட அகழாய்வு பணி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

சென்னை, பெப். 12,

கீழடியில் 8ஆம் கட்ட அக ழாய்வு பணிகளை முதலமைச் சர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக நேற்று தொடங்கி வைத்தார்.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே உள்ள கீழடியில், மத்திய அரசின் தொல்லியல் துறை சார்பில் கடந்த 2015ஆம் ஆண்டு முதல் 3 கட்டங்களாக அகழாய்வு பணிகள் நடைபெற்று முடிந் துள்ளன.

இந்தநிலையில் கீழடியில் 8ஆம் கட்ட அகழாய்வு பணிகளை தலைமை செயலகத் தில் இருந்து காணொலி வாயிலாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். கீழடி, மணலூர், கொந்தகை, அகரம் ஆகிய பகுதிகளில் 8ஆம் கட்ட அக ழாய்வுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து கங்கை கொண்ட சோழபுரம், மாளிகை மேட்டில் 2ஆம் கட்ட அக



ழாய்வு பணிகளையும் முதல மைச்சர் தொடங்கி வைத்தார். தூத்துக்குடி மாவட்டம் சிவ களையில் 3ஆம் கட்ட அகழாய்வு பணிகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.

(அ)

# நீட் குறித்து விவாதிக்க தயார் ஸ்டாலினுக்கு ஈ. பி. எஸ் சவால்

சென்னை, பெப். 12,

நீட் தேர்வு குறித்து விவா திக்க நானும், ஓபிஎஸ்ஸும் தயார் என்று எடப்பாடி பழனி சாமி முதல்வர் ஸ்டாலினுக்கு பதில் சவால் விட்டுள்ளார்.

மதுரை மாநகராட்சியில் அதிமுக வேட்பாளர்களை ஆத ரித்து எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி நேற்று பிரச்சாரம் செய்தார். அப்போது பேசிய அவர்,

திமுக ஆட்சி அமைந்தவு டன், முதல் கையெழுத்து நீட் தேர்வு ரத்துதான் என்று சொன்னார்கள். ஆட்சிக்கு வந்து ஒன்பது மாதங்கள் ஆகி விட்டன, இன்னும் நீட் தேர்வை ரத்து செய்யமுடிய வில்லை. ஏற்கனவே சொன் னதுபோல், பொய் பேசுவதற்கு நோபல் பரிசு கொடுக்க வேண்டுமெனில், அது ஸ்டாலி னுக்குதான் கொடுக்க வேண்டும்.

ஆகவே, நீட் தேர்வு குறித்து பொது இடத்தில் வைத்து விவாதிக்க நானும், ஓபி எஸ் ஸும் தயாராக இருக்கிறோம். நீங்கள் தயாரா? சும்மா பேசி விட்டு தப்பிக்கெல்லாம் முடி யாது. சவால் விட்டால் சவால் தான் என்று" முதல்வருக்கு பதில் சவால் விட்டுள்ளார்.



## காரைநகர்-ஊர்காவற்துறை பாதை பழுதானமையால் பயணிகள் அவதி!

யாழ்ப்பாணம், பெப். 12

காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையிலான பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பாதை கடந்த மூன்று தினங்களாக சேவையில் ஈடுபடாமையால் பெரும் இடர்பாடுகள் எதிர்நோக்கப்படுகின்றன.

குறிப்பாக, ஊர்காவற்றுறை பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை நீதிமன்று, ஊர்காவற்றுறை ஆதார வைத்திய சாலை போன்றவற்றில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

பாதையின் வெளியிணைப்பு இயந்திரம் பழுதடைந்துள்ளமையாலேயே சேவை நிறுத்தப்பட்டுள்ளது என காரணம் கூறப்பட்டுள்ளது.

மேற்படி பாதையில் கேபிள் அறுந்துபோதல், வெளியிணைப்பு இயந்திரம் பழுதடைதல் போன்ற சம்பவங்கள் கடந்த காலங்களில் அடிக்கடி இடம்பெற்றன.

எனினும், பின்னர் புதிய கேபிள் இணைக்கப்பட்டு அண்மைக்காலமாக தடையின்றி சேவை இடம்பெற்றது.

இரு வெளியிணைப்பு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு, ஒன்று பழுதடைந்தால் மற்றையதை பயன்படுத்தும் நடைமுறை பின்பற்றப்பட்டது.

ஆனால், தற்போது பொருத்தப்பட்டிருந்த ஒரு வெளியிணைப்பு இயந்திரம் பழுதடைந்துள்ளது எனக் கூறி மூன்று தினங்களாக பாதை சேவையில் ஈடுபடாமல் உள்ளது.

அரச உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் தற்காலிகமாக ஒழுங்குபடுத்தப்பட்ட மோட்டார் படகில் ஆபத்துக்களுக்கு மத்தியில் தினமும் பயணம் செய்கின்றனர்.

எனவே, பாதையின் சீரான சேவைக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

காரைநகரில் இருந்து 5 நிமிடங்களில் பாதையில் ஊர்காவற்துறைக்கு செல்லக் கூடியவர்கள் குறித்த பாதை சேவை தடைப்பட்டு இருப்பதனால், காரைநகரில் இருந்து யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்துறைக்கு செல்ல வேண்டும். இதனால் அவர்கள் சுமார் 45 கிலோ மீற்றர் தூரம் சுற்றி செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# தேர்தலுக்கான அறிவிப்பு உரிய நேரம் வெளிவரும்!

### கூறுகிறார் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ

கொழும்பு, பெப். 12

**“உரிய நேரத்தில் தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்படும். எனவே, அதனை எதிர்கொள்ள தயாராகவே இருங்கள்.” - என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களுக்கு, ஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் கொரோனாவை காரணம் காட்டி உள்ளாட்சிசபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. ஆனால் இன்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி பிரசாரக் கூட்டம் நடத்துகின்றது. எனவே, உள்ளாட்சித் தேர்தல் விரைவில் நடத்தப்படவேண்டும்.” - என ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியது.

இதற்கு பதிலளித்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ,

“தேர்தல்களை எதிர்கொள்ள ராஜபக்ஷக்கள் ஒருபோதும் அஞ்சியது கிடையாது. முன்கூட்டியே தேர்தலை நடத்தி வீட்டுக்கு சென்ற தலைவர்கள் அவர்கள். எனவே, எந்நேரத்திலும் தேர்தலை எதிர்கொள்ள நாமும் தயார். உரிய நேரத்தில் அதற்கான அறிவிப்பு வெளியாகும். தயாராகவே இருங்கள். அதேபோல தேர்தல் நடத்தப்பட்டால் அதில் எமக்கு வெற்றி உறுதி என்பதையும் கூறிவைக்க விரும்புகிறேன்.” - என்றார்.

(அ)

# பயங்கரவாதத் தடைச்சட்ட திருத்தம் சர்வதேசத்தை திருப்திப்படுத்தவல்ல!

### அமைச்சர் அலி சப்ரி சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 12

பயங்கரவாத தடைச்சட்ட (தற்காலிக ஏற்பாடுகள்) புதிய திருத்தச் சட்ட மூலம் சர்வதேசத்தை திருப்திப்படுத் துவதற்கானதல்லவென நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதமின்றி நீதித்துறை சுயாதீனம் தொடர்பில் அனைவரும் ஒரே மனப்பான்மையுடன் செயல்பட வேண்டுமென்றும் அவர் சபையில் கேட்டுக் கொண்டார்.

மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் சில்லறைத்தனமானவை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட எதிர்க் கட்சியினர் விமர்சிக்கின்றனர். எனினும் அவர்களது நல்லாட்சி அரசில் ஏன் அதனை மேற்கொள்ளவில்லையென நான் கேட்க விரும்புகின்றேன் என்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.



மூலங்கள் மீதான விவாதத்தின் இறுதியில் பதிலளித்து உரையாற்றிய நீதியமைச்சர், பயங்கரவாத தடைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்கள் போதுமானதல்ல என எதிர்க் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

எமது அரசாங்கம் 48 வருடங்களுக்கு பின்னர் பயங்கரவாத தடைச் சட்டத்தில் மாற்றம் ஏற்படுத்துவதற்காக ஓய்வு பெற்ற நீதியரசர் ஒருவரின் தலைமையில் விசேட குழு அமைத்து அதற்கான நடவ டிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்தக் குழுவிடம் ஆலோசனைகளை முன்வைக்கவும் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் நாட்டின் சட்டங்கள் மற்றும் தனியார் சுதந்திரத்தைப் பலப்படுத்துவதற்காகவே கொண்டுவரப்பட்டுள்ளன. ஒருபோதும் அவை சர்வதேசத்தை திருத்திப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட விடயமல்ல. அரசியலமைப்பின் மூலம் அரசாங்கத்திற்கு அதற்கான அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது-என்றார்.

(அ)

# 70 வயதுக்கு மேற்பட்ட கைதிகளை விடுவிக்க அரசாங்கம் யோசனை

கொழும்பு, பெப். 12

70 வயதுக்கு மேற்பட்ட கைதிகளை விடுதலை செய்வதற்கான சட்டத்தை அறிமுகப்படுத்த எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார முன்மொழிந்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் பண்டார, 10 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட சிறைத்தண்டனையை பூர்த்தி செய்தல் போன்ற நிபந்தனைகளை கருத்தில் கொள்ளவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

கைதிகளின் நலன் மற்றும் அவர்களின் தேவைகள் குறித்து கவனம் செலுத்தப்படவேண்டும் என்று கூறிய பாராளுமன்ற உறுப்பினர், அரசாங்கம் எவ்வாறாயினும் அத்தகைய நடவடிக்கைகளுக்கு அப்பால் செல்லவேண்டும் என்றும் கூறினார்.

கைதி செய்த குற்றச்செயலைப் பொருட்படுத்தாமல் அத்தகைய சட்டத்தை அமுல்படுத்தவேண்டும் என்று அவர் முன்மொழிந்தார்.

இதேவேளை, விவாதத்தில் கலந்துகொண்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் விஜேசேகர, ஒரு கைதிக்கு உணவுக்காக அரசாங்கம் நாளாந்தம் 300 ரூபாவை செலவிடுவதாக தெரிவித்தார்.

ஊனமுற்ற கைதிகள் உட்பட 80-90 வயதுக்கு இடைப்பட்ட முதியோர் கைதிகள் பலர் இருப்பதாகத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் விஜேசேகர அவர்கள் நேற்று அரசாங்கத்துக்கு சுமையாக மாறியுள்ளதாகத் தெரிவித்தார்.

14 நாட்கள் தனிமைப்படுத்தலுக்குப் பிறகு அன்ரிஜென் சோதனைகளுக்கு ரூபா 2,000 மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு ரூபா 6,000 செலவிடப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், எச்.ஐ.வி பரிசோதனைகள், எக்ஸ்ரே மற்றும் மருந்துகளுக்கு பெரும் தொகை செலவிடப்படுவதாகவும் அவர் கூறினார்.

எனவே, 15-20 வருட சிறைத் தண்டனையை பூர்த்தி செய்த கைதிகளை விடுதலை செய்வது குறித்து பரிசீலிக்கவேண்டும். அவர்களில் பெரும்பாலானோர் மன ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் கூறினார்.

(அ)

# நாட்டில் நடப்பது என்ன என்று அறிய 2 நாள் விவாதம் கோருகிறது எதிரணி

கொழும்பு, பெப். 12

“பாராளுமன்றத்துக்கே நிதி அதிகாரம் இருக்கின்றது. ஆனாலும், அதிஉயர் சபைக்கு பொறுப்புகூறும் விதத்தில் நிதி அமைச்சர் செயற்படுவதில்லை. இதனால் நாட்டில் என்ன நடக்கின்றது என்பது தெரியாதுள்ளது.” - என்று எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல எம்.பி. தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் ஒழுங்குப் பிரச்னையொன்றை எழுப்பிய அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டின் நிலைவரம் தொடர்பில் அடுத்த பாராளுமன்ற அமர்வின்போது இரு நாட்கள் விவாதம் நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்துள்ளது. எனவே, அதற்கான திகதி கட்டாயம் ஒதுக்கப்படவேண்டும்.

உண்மையாலுமே பாராளுமன்றத்துக்கே நிதி அதிகாரம் இருகக்கின்றது. எனினும், நாட்டின் நிதி நிலைவரம் தொடர்பில் நிதி அமைச்சர் பாராளுமன்றத்துக்கு எதனையும் தெரியப்படுத்துவதில்லை. இதனால் நாட்டில் என்ன நடக்கின்றது என்பது எமக்கும் தெரியாமல் உள்ளது.

அரசால் தற்போது முன்வைக்கப்பட்டுவரும் தர்க்கங்கள் போலியானவை என்பதை அமைச்சர் கம்மன்பிலவின் கூற்று உறுதிப்படுத்தியது. இந்த நெருக்கடி நிலைமைக்கு கொரோனா பெருந்தொற்று காரணமல்ல என்பதை அவர் விபரித்திருந்தார். உண்மை நிலைவரத்தை நிதி அமைச்சர் தெளிவுபடுத்துவதில்லை-என்றார்.

(அ)

# சுகாதாரப் பணியாளர் சம்பளம் வெகுவிரைவில் பத்திரிகைகளில்!

## அமைச்சர் கெஹலிய தகவல்



கொழும்பு, பெப். 12

**சுகாதாரப் பிரிவில் பணியாற்றுபவர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான விவரங்கள் பத்திரிகைகளில் விரிவாக வெளியிடப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

இந்த நாட்களில் சுகாதாரப் பணியாளர்கள் முன்னெடுத்து வரும் வேலை நிறுத்தப் போராட்டம் குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

எதிர்வரும் சில நாட்களில் சுகாதாரத்துறையில் இருப்பவர்களின் சம்பள விவரங்கள் பத்திரிகைகளில் வெளியாகும். அப்போது மக்களுக்கு இவர்களின் சம்பள விபரங்கள் தொடர்பில் அறியவரும்.

சாதாரண செவிலியர் ஒருவர் 400 மணிநேரம் மேலதிகமாக சேவை செய்கிறார் என்றால், அதை நாம் 150 மணித்தியாலமாக எடுத்துக் கொண்டால், மூன்றாம் தர தாதியர் ஒருவர் மாதமொன்றுக்கு சாதாரணமாக 102,000 ரூபா சம்பளம் பெறுகிறார். அதேபோல முதல்தர செவிலியர் ஒருவர் 180,000 ரூபாவை சம்பளமாக பெறுகிறார்- என்றார்.

(அ)

# அமெரிக்க தூதுவராக ஜூலி சங் நியமனம்



கொழும்பு, பெப். 12

இலங்கைக்கான புதிய அமெரிக்க தூதுவராக ஜூலி சங் நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் துணை வெளியுறவுச் செயலாளர் வென்டி ஆர். சேர்மன் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

ஜூலி சங் இதற்கு முன்னர் மேற்கு அரைக்கோள விவகாரங்களுக்கான மாநில உதவிச் செயலாளராக பணியாற்றியுள்ளார். அத்துடன், இவர் செயலாளரின் சிறப்பு மரியாதை விருது உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

முன்னதாக இவர் கம்போடியாவின் புனோம்பென் நகரில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் துணைத் தலைவராகவும் தாய்லாந்தின் பாங்கொக்கில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் பொருளாதார ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார்.

ஈராக்கின் பாக்தாத்தில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இடைநிலை ஒருங்கிணைப்பாளருக்கு சங் தலைமை பணியாளராகவும் பணியாற்றியுள்ளார்.

மேலும் கொலம்பியா, வியட்நாம் மற்றும் ஜப்பானில் உள்ள அமெரிக்க தூதரகங்களிலும், சீனாவின் குவாங் சோவில் உள்ள அமெரிக்க துணைத் தூதரகத்திலும் இவர் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

டெங்கு ஒழிப்பில் ஈடுபடும்

# 847 சுகாதார ஊழியர்களுக்கு அடிப்படை தகுதிகள் இல்லை

கொழும்பு, பெப். 12

2017ஆம் ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட டெங்கு ஒழிப்பு தொடர்பான 847 சுகாதார உதவியாளர்களுக்கு சேவையில் ஈடுபடுவதற்கான அடிப்படைத் தகுதிகள் இல்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தை இலக்காகக் கொண்டு 1500 பேர் பணியமர்த்தப்பட்டுள்ளனர் என அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 1,169 பேர் தற்போது இத்திட்டம் தொடர்பான சேவைகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்களில் 847 பேர் சுகாதாரப் பணியாளருக்குத் தேவையான அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்யவில்லை என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆட்சேர்ப்பு குறித்த கொள்கை முடிவை அரசாங்கம் கோரும் வரை, கடந்த ஆண்டு ஒக்ரோபரில் 322 தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களின் ஒப்பந்த காலங்கள் ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டது. தகுதியற்ற 847 பேர் பல்நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு மேலும் கூறியுள்ளது.

(அ)

# மலையக ரயில் சேவை பாதிப்பு



கொழும்பு, பெப். 12

கண்டியில் இருந்து பதுளை நோக்கி பொருட்களை ஏற்றிச் சென்ற சரக்கு ரயில், வட்டவளை ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்றுக் காலை தடம் புரண்டது.

இதன் காரணமாக, மலைநாட்டு ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக ரயில் கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், குறித்த ரயிலை தடமேற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஜனநாயகத்தின் காவலனே மங்கள

## சஜித் சபையில் புகழாரம்



கொழும்பு, பெப். 12

“ஜனநாயகத்துக்காக போராடிய - களமாடிய பண்புமிக்க அரசியல்வாதியே அமரர் மங்கள சமரவீர ” - என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் அமரர் மங்கள சமரவீரவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் தற்போது பாராளுமன்றத்தில் இடம்பெற்று வருகின்றது. அவ்விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே எதிர்க் கட்சித் தலைவர் இவ்வாறு புகழாரம் சூட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

என்னை ஜனாதிபதி வேட்பாளராக்குவதற்கு முன்னின்று செயற்பட்டவர்தான் மங்கள சமரவீர. எனக்கு ஆதரவு தெரிவித்து ஹரின் பெர்னாண்டோ பதுளையில் முதலாவது கூட்டத்தை நடத்தினார். மாத்தறையில் மங்கள இரண்டாவது கூட்டத்தை நடத்தினார்.

மங்கள, எப்போதும் சரியான பக்கத்திலேயே நிற்பார். ஜனநாயகத்துக்காக துணிந்து போராடுவார். ஜனநாயகத்தை வெற்றிபெற வைக்க தன்னை அர்ப்பணித்து செயற்படுவார். சர்வதேசத்தின் ஆதரவை வென்றவர்-என்றார். (அ)

# ஐஸ் போதைப்பொருளுடன் வத்தளையில் ஒருவர் கைது!

கொழும்பு, பெப். 12

வத்தளை பிரதேசத்தில் ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேலியகொட விசேட குற்ற விசாரணைப் பிரிவு முன்னெடுத்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது, 52 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

இந்த நபரிடமிருந்து 2 கிலோ 500 கிராம் ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேகநபர், நீண்டகாலமாக போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்துள்ளதாக விசாரணைகளை முன்னெடுத்துவரும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# நன்கொடை உண்டியலை உடைத்த பொலிஸ் கைது!

கொழும்பு, பெப். 12

நன்கொடை உண்டியலை உடைத்து அதில் இருந்த ஆயிரத்து 408 ரூபா பணத்தை களவாடிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொறட்டுவ - ரத்தாவத்த பகுதியில் அமைந்துள்ள பல்பொருள் அங்காடியொன்றில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ராஜதந்திர பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றி வரும் பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நன்கொடை உண்டியலை உடைத்து பணம் களவாடிய குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை பல்பொருள் அங்காடியின் பணியாளர்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சிரேஷ்ட பிரஜைகளின் நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான நன்கொடை உண்டியலிலிருந்து குறித்த நபர் பணத்தை களவாடியுள்ளார்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# யானைக்கு தொல்லை கொடுத்த சாரதிக்கு ரூ. 2 லட்சம் அபராதம்!

கொழும்பு, பெப். 12

திருகோணமலை ஹபரண பிரதான வீதியில் நடமாடிக் கொண்டிருந்த காட்டு யானையை கப் வாகனத்தால் விரட்டிச் சென்று யானைக்கு தொல்லை கொடுத்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட வாகனச் சாரதி குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து ஹபரண நீதிமன்ற நீதிபதி சமன் வெரணியகொட இரண்டு லட்சம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

ரசிக கிம்ஹான் தனஞ்சய ரூபசிங்க என்ற நபருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டது.

வனவிலங்குகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் காட்டு விலங்குகளுக்கு தொல்லை கொடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை ஹபரண வீதியில் 2021 டிசெம்பர் 25ஆம் திகதி சந்தேகநபர் இந்த குற்றத்தை புரிந்துள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் இந்த நபருக்கு எதிராக கெக்கிராவ நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.(அ)

# மன்னாரில் தெரிவு செய்யப்பட்ட 20 பயனாளிகளுக்கு உணவுப்பொதி

மன்னார், பெப். 12

மன்னாரில் சமுதாய சீர்திருத்த கட்டளையாளர்களுக்கான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 20 பயனாளிகளுக்கு ஒரு தொகுதி உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 .30 மணியளவில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினால் (மெசிடோ) அத்தியாவசிய பொருள்கள் அடங்கிய உலர் உணவுப்பொதி மன்னாரில் உள்ள அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

மன்னார் நீதவான் நீதிமன்றத்தின் சமுதாய சீர்திருத்த திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மன்னார் நீதிமன்ற சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் எம்.ஏ.எம். அனஸ், மாந்தை மேற்கு சமுதாய சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.பார்த்தீபன், மன்னார் நகர பிரதேச சமுதாய சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.இருதயராஜ் மற்றும் மன்னார் மெசிடோ நிறுவனத்தின் பணியாளர்கள் பங்கேற்றனர்.

(அ)

# பாதாளக் குழு உறுப்பினர் 'அபா' சூட்டில் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 12

பாதாளக்குழு உறுப்பின ரான அபா என்றழைக்கப்படும் துலான் சமீர சம்பத், விசேட அதிரடி படையின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலியாகி யுள்ளார்.

மொறட்டுவ - எகொடவு யன பகுதியில் வைத்தே நேற்று முன் தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவரைக் கைது செய்வதற் காக படையினர் சென்றவேளை, சந்தேகநபர், விசேட அதிரடிப்ப டையினரை நோக்கி துப்பாக் கிப் பிரயோகம் மேற்கொண் டுள்ளார்.

இதில் விசேட அதிரடிபடை அதிகாரியொருவர் காயம டைந்து பாணந்துறை வைத் தியசாலையில் சேர்க்கப்பட் டார்.இந்த சுற்றிவளைப்பில் மேலும் 6 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# போலியான தடுப்பூசி அட்டைகளை உபயோகிப்போருக்கு எச்சரிக்கை!

கொழும்பு, பெப். 12

போலி தடுப்பூசி அட்டை களைப் பயன்படுத்துவோருக்கு இலங்கை சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தடுப்பூசி பெற்றுக்கொண்ட அனைவரது தகவல்களும் சுகாதார அமைச்சிடம் இருப் பதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

எனவே தடுப்பூசி பெற்றுக் கொள்வதை தவிர்ப்பது ஒரு பய னற்ற முயற்சி என மருத்துவர் அன் வர் ஹம்தானி தெரிவித்தார்.

மேலும் தடுப்பூசி பெற்றுக் கொள்வது ஒரு சமூகப் பொறுப் பாகும். எனவே அனைவரும் கொரோனா தடுப்பூசியை பெற வேண்டும் எனவும் அவர் குறிப் பிட்டார். (அ)

# தமிழ்த் தேசியக் கட்சிகளின் கலந்துரையாடல் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 12

தமிழ்த் தேசியக் கட்சிகளின் அரசியல் கலந்துரையாடல் பிற் போடப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் முன்னதாக இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஆகிய கூட்டணி களில் அங்கம் வகிக்கும் கட்சிகள் இணைந்து இந்த அரசியல் கலந்துரையாடலை ஒழுங்கமைத்திருந்தன.

இன்று யாழ்ப்பாணம், இளங்கலைஞர் மண்டபத்தில் இந்த கலந்துரையாடலை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், தற்போதைய மழையுடனான காலநிலை உள்ளிட்ட காரணங்களினால் அது எதிர்வரும் 16ஆம் திக திக்கு ஒத்திவைக்கப்பட்டுள் ளது. (அ)

# சிறுபான்மை மக்களுக்காக நேசக்கரம் நீட்டியவர் மங்கள

## சபையில் சுட்டிக்காட்டினார் கிரியெல்ல



**கொழும்பு, பெப். 12**

**"மங்கள சமரவீர மனித உரிமைகளை மதித்தவர். சிறுபான்மையின மக்களுக்காக நேசக்கரம் நீட்டியவர்." - என்று ஐக்கிய மக் கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமரர் மங்கள சமரவீரவுக்கு அனுதாபம் தெரி விக்கும் பிரேரணைமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில்தான் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

மங்கள சமரவீர அரசியலில் புரட்சி செய்தவர். 1989 ஆம் ஆண்டு தாய்மார் முன்னணியை உருவாக்கினார். காணாமல்போனவர்கள் பட்டி யலை தயாரித்தார். அந்த பட்டி யலையே தற்போதைய பிரதமர் அன்று ஜெனிவாவுக்கு எடுத்துச் சென்றார். எனினும், அவர் விமான நிலையத்தில் தடுக்கப் பட்டார்.

மங்கள சமரவீர சிறுபான் மையின மக்களுக்கு நேசக்கரம் நீட்டியவர். நீதியின் பக்கம் நின் றவர். அதனால்தான் அவர் வெளிவிவகார அமைச்சராக செயல்பட்ட காலத்தில் எமது நாட்டுக்கு ஆதரவு கிட்டியது.

பொதுத்தேர்தலில் போட்டி யிடவில்லை என மங்கள அறி வித்தபோது நாம் வியப்படைந தோம். ஆனால் இளைஞர்களை ஒன்றுதிரட்டி ஓர் அமைப்பை ஆரம்பித்தார். அவர் எப்போ தும் தூரநோக்கு சிந்தனை அடிப்படையில் செயல்பட்ட வர்-என்றார். (அ)

# நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய தாதியர் போராட்டம் முடிவுக்கு வரும்

## சுகாதார அமைச்சர் நம்பிக்கை

கொழும்பு, பெப். 12

நீதிமன்றத்தின் உத்தரவுக்கு மதிப்பளித்து, அரச தாதியர் உத்தியோகத்தர்கள் சங்கம், பணிப்புறக்கணிப்புப் போராட் டத்தை இடைநிறுத்தும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நம்பிக்கை வெளி யிட்டுள்ளார்.

பல சுகாதார தொழிற்சங் கங்கள் முன்னெடுத்த காலவ ரையற்ற பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை இடைநிறுத்து மாறு அரச தாதிய உத்தியோகத் தர்கள் சங்கம் மற்றும் அதன் தலைவர் சமன் ரத்னபிரிய ஆகி யோருக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று முன்தினம் இரண்டு தடை உத்தரவுகளை பிறப்பித்துள்ளது.

நீதிமன்ற உத்தரவுக்கு அமை வாக அரச வைத்தியசாலைக ளுக்குச் செல்லும் நோயாளர் கள் எதிர்நோக்கும் இன்னல்கள் முடிவுக்கு வரும் என நம்புவ தாக அமைச்சர் ரம்புக்வெல தெரிவித்தார்.

இதற்கிடையில், தங்களுக்கு தடை உத்தரவு வரவில்லை என்று துணை மருத்துவத் தொழில் களுக்கான கூட்டு கவுன்சிலின் தலைவர் ரவி குமுதேஷ் கூறி னார்.

அத்தகைய உத்தரவு அவர்களுக்குத் தெரியப்படுத் தப்பட்டால், தேவையான சட்ட ஆலோசனையைப் பின்பற்றி பதிலளிப்பார்கள் என்று குமுதேஷ் கூறினார்.

அவர்களின் கோரிக்கைகள் நியாயமானவை என்றும், வேலைநிறுத்தப் போராட்டம் அமைதியான முறையில் நடை பெற்று வருவதாகவும், அவர்க ளின் குறைகளை ஒடுக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல், அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்யவேண்டும் என் றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அரசாங்கம் ஜனநாயக கட்ட மைப்புக்குள் செயல்படவேண் டும் என்றும், அவர்களின் பிரச்னைகளுக்கு ஓரிரு நாட்க ளில் தீர்வு காண முடியும் என் றும் அவர் கூறினார். (அ)

# தொழிற்சங்க போராட்டங்களை நிறுத்த சட்டம் இயற்றவேண்டும்

## ரோஹித அபேகுணவர்த்தன கோரிக்கை

கொழும்பு, பெப். 12

தொழிற்சங்கங்கள் தமது உரிமைகளை கேட்டு போராடு வதில் எந்த தவறும் இல்லை. ஆனால் அப்பாவி மக்களின் உயிருடன் விளையாடி, அவர்க ளின் உயிரை பலியெடுத்துத் தான் தொழிற்சங்க உரிமை களை பெற்றுக்கொள்ளவேண் டும் என்றால் அதனை தடுக்க சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம் பெற்ற குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத் தச்) சட்டமூலம், ஆளணியின ருக்கெதிரான கண்ணிவெடி களைத் தடை செய்தல் சட்ட மூலம், குடியியல் நடவ டிக்கை முறைச் சட்டக்கோவை (திருத் தச்) சட்டமூலம், மாகாணசபை களை (முத்திரைத் தீர்வை கைமாற்றுதல்) திருத்த சட்ட மூலம் ஆகியவற்றின் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்-

கடந்த மூன்று நாட்களாக சுகாதாரத் துறையினரின் வேலை நிறுத்த போராட்டம் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றது. இந்த போராட்டத்தால் அப்பாவி பொதுமக்களே பாதிக்கப்பட் டுள்ளனர்.

உணவு உண்ணாது நீண்ட தூரப் பிரதேசங்களில் இருந்து வைத்தியசாலைகளுக்கு வந் தால் இங்கு மருந்துகளை எடுக்க முடியாதுள்ளது.

சம்பள உயர்வு எனக் கூறிக் கொண்டு பொதுமக்களை பலி யெடுக்கும் வேலையை செய் கின்றனர். சுகாதாரத்துறை என் பது அத்தியாவசிய சேவை யாகும். வைத்திய தொழிற்சங் கங்கள் அதனை தவறாக பயன் படுத்தமுடியாது.

தொழிற்சங்கப் போராட் டங்களை முன்னெடுக்கவேண் டும் என்றால் அதற்கென முறை யொன்று உள்ளது.

பொதுமக்களை கொன்றுகு வித்து இதனை முன்னெடுக்க வேண்டுமா?

அப்பாவி மக்களுக்கு தனி யார் வைத்தியசாலைகளுக்கு சென்று மருந்து பெற்றுக் கொள்ள முடியாது. அவர்க ளுக்கு அரச வைத்திய சாலைகளே பாதுகாப்பு.

இதனை பயன்படுத்தி அரச எதிர்ப்பு அலையொன்றை உரு வாக்கவே இவர்கள் முயற்சிக் கின்றனர்.

வடக்கு-கிழக்கு-தெற்கில் அப்பாவி மக்களே இதனால் பாதிக்கப்படுகின்றனர்.ஆகவே இந்த செயற்பாடுகளை நாச மாக்கும் நடவடிக்கைகளை தடுக்க நீதி அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறான தவறான செயல் பாடுகளை இப்போதாவது நிறுத்தியாகவேண்டும்.

நாம் எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில் இதே தவறு களை செய்திருக்கலாம். ஆனால் இப்போது நாம் அதனை திருத் திக்கொள்ளவேண்டும். அதுவே அரசியல் அனுபவமாகும்.

எனவே இப்போது உடனடி யாக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். போராட்டங் களை தடுத்து மக்களை பாதுகாக்க சட்ட முறைப்படி தீர்மானம் எடுப்பதே சரியானதாகும்-என்றார். (அ)

# ரஞ்சனின் குரல் பதிவுகளை பகிரங்கப்படுத்தவேண்டும்

## பொதுஜன பெரமுன கோரிக்கை

கொழும்பு, பெப். 12

முன்னாள் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க ஜனாதி பதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டால் அவ ரது தொலைபேசியில் உள்ள அனைத்து ஒலிப்பதிவுகளையும் பகிரங்கப்படுத்தவேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் பாராளுமன்ற உறுப்பினர் பிரமித பண்டார தென்னக் கோன் தெரிவித்துள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்யக்கோரும் நபர்கள், தவறு செய்து சிறை யில் அடைக்கப்படுவதை விரும் பாதவர்களே எனவும், அதனா லேயே ரஞ்சனை விடுதலை செய்யவேண்டும் என்ற கருத்து நிலவுவதாகவும் பிரமித பண் டார எம்.பி சுட்டிக்காட்டினார்.

ரஞ்சன் ராமநாயக்க நீதித் துறைக்கு எதிராக வெளியிட்ட கருத்துக்களின் பாரதூரத்தை நாட்டு மக்கள் அறியவேண்டும் எனவும் அவர் கூறினார்.

உண்மையைக் கூறியதற்காக ரஞ்சன் ராமநாயக்க சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, ரஞ்சன் ராமநாயக்க பொலிஸ் மற்றும் நீதித்துறை மீது பிரயோகிக்கப்பட்டுள்ள அழுத்தங்களை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டுமென வும், அவரது அனைத்து குரல் பதிவுகளையும் சமூகமயப்படுத் துவதன் ஊடாக அறிந்து கொள்ள முடியும் என அவர் மேலும் கூறினார். (அ)

# ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனையும் பயங்கரவாத தடைச்சட்ட திருத்தமும்!

**பவித்திரன்**

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் அரசாங்கம் கொண்டுவரும் திருத்தங்கள் சர்வதேசத்தை திருப்திப்படுத்துமா? ஐரோப்பிய ஒன்றியம் வெளிப்படுத்தப் போகும் பிரதிபலிப்பு என்ன? இவைதான் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இப்போது எழுப்பப்படும் கேள்வி!

இலங்கையில் கடந்த 43 வருட காலமாக நடைமுறையிலிருக்கும் பயங்கரவாத தடைச்சட்டம் மீண்டும் அரசியலில் பேசுபொருளாகியிருக்கின்றது. பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இதற்காகக் கொண்டுவரப்பட்ட திருத்தமும் எதிர்த்தரப்பினரால் கடும் விமர்சனத்துக்குள்ளாகியிருக்கின்றது. குறிப்பாக தமிழ், முஸ்லிம் கட்சிகள் இதனை கடுமையாக விமர்சித்தன.

சர்வதேசத்தை சமாளிப்பதற்காக சில திருத்தங்களைச் செய்வதாகக் காட்டிக் கொண்டாலும், பயங்கரவாத தடைச் சட்டம் என்ற ஆயுதத்தை கைகளில் வைத்துக்கொண்டு ஆட்சியைத் தொடர்வதுதான் அரசாங்கத்தின் உபாயம் என்பதும் அரசு முன்வைத்திருக்கும் திருத்தங்கள் மூலமாக புலனாகிறது,

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஆரம்பமாகும் நிலையில் பயங்கரவாத தடைச்சட்டம் குறித்து பேசப்படுவது வழமையானதுதான். 49 ஆவது ஜெனிவா கூட்டத் தொடர் எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் பயங்கரவாத தடைச் சட்டம் குறித்த பேச்சுக்களையும், வாக்குறுதிகளையும் ஊடகங்களில் அவதானிக்க முடிகின்றது. அரசின் திருத்தங்கள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருப்பதால், அது குறித்த விவாதம் அங்கும் இடம்பெற்றுள்ளது.

1979 ஆம் ஆண்டு தமிழ் இளைஞர்களின் போராட்டம் தீவிரமடையத் தொடங்கிய போது அதனைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு தற்காலிக ஏற்பாடாகத்தான் பயங்கரவாத தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஜே.ஆர். ஜெயவர்த்தன ஜனாதிபதியாக இருந்த போது, கொண்டுவரப்பட்ட இந்த சட்டமூலம் ஆறு மாதங்களுக்கு மட்டுமே நடைமுறையில் இருக்கும் என வாக்குறுதியளிக்கப்பட்டிருந்தது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் உள்ள சில சரத்துக்கள் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகவும், பாதுகாப்புப் படையினர் கட்டுமீறிச் செயற்படுவதற்கான அதிகாரங்களைக் கொடுப்பதாகவும் அமைந்திருந்தது. அதனால் உருவாகிய கண்டனங்களையடுத்தே ஆறு மாதங்களுடன் அது நீக்கப்படும் என்ற வாக்குறுதியை ஜெயவர்த்தன வழங்கியிருந்தார்.

பின்னர் 1982 இல் இது நிரந்தரமான சட்டமாக்கப்பட்டது. இப்போது 43 வருடங்கள் சென்றுவிட்ட போதிலும், அதனை நீக்குவதற்குப் பதிலாக அதில் திருத்தங்கள் சிலவற்றைச் செய்வதில்தான் அரசாங்கம் அக்கறைகாட்டுகின்றது. அதுவும், சர்வதேச ரீதியாக உருவாகியிருக்கும் அழுத்தங்களைச் சமாளிப்பதற்கான ஒரு உத்தியாகத்தான் இதனை செய்வதற்கு அரசாங்கம் முற்படுகின்றது.

சர்வதேச ரீதியாகப் பார்க்கும் போது, இரண்டு இடங்களிலிருந்து நெருக்கடிகளை அரசாங்கம் எதிர்கொள்கின்றது.

முதலாவது ஜெனீவா. ஜெனீவாவில் கடந்த மார்ச் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கொடூரமான சரத்துக்கள் நீக்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டிருந்தது. ஜெனீவா கூட்டத் தொடர் இம்மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்த விவகாரம் மீண்டும் அங்கு கிளப்பப்படும் என்ற நிலையில்தான் இலங்கை அரசாங்கம் தனது அக்கறையை இப்போது வெளிப்படுத்த முற்படுகின்றது.




இரண்டாவது ஐரோப்பிய ஒன்றியம். இலங்கைக்கு வழங்கும் ஜி.எஸ்.பி. சலுகைக்கான நிபந்தனையாக பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும், அல்லது அதிலுள்ள கொடூரமான சரத்துக்கள் திருத்தப்பட வேண்டும் என்பதை ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்துள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்படும் என இலங்கை கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையில்தான் 2017 இல் ஜீ.எஸ்.பி. சலுகை இலங்கைக்கு மீண்டும் வழங்கப்பட்டது. ஆனால், இன்றுவரையில் இலங்கை அதற்காக எதனையும் செய்யவில்லை என்பதால், இவ்வருடத்துடன் ஜ.எஸ்.பி. சலுகையை நிறுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்திருக்கின்றது. அதனால்தான் இலங்கையும் அவசரமாக திருத்தங்களைச் செய்வதாக அறிவிக்கின்றது.

அரசியல் எதிராளிகளையும், சிறுபான்மையினரையும் இலக்குவைப்பதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இலங்கை அரசாங்கம் பயன்படுத்துகின்றது என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இவ்வாறான அழுத்தங்கள் முன்வைக்கப்படுகின்றது. வடக்கு, கிழக்கில் தீவிரவாதம் ஆரம்பமான போது அதனை ஒடுக்குவதற்காகக் கொண்டுவரப்பட்ட இந்த சட்டமூலத்தை, போர் முடிவுக்கு வந்து 12 வருடங்கள் சென்றுவிட்ட நிலையிலும் பயன்படுத்துவதை எந்தவகையிலும் நியாயப்படுத்தக்கூடிய நிலையில் இலங்கை அரசாங்கமும் இல்லை.



அந்த நிலையில்தான் இப்போது பயங்கரவாத தடைச் சட்டம் திருத்தப்படுவதாக அரசாங்கம் பகிரங்கமாக அறிவித்திருக்கின்றது. கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சின் அலுவலகத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் வெளிநாடுகளின் தூதுவர்களை சந்தித்த வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டார்.

> **சர்வதேசத்தை சமாளிப்பதற்காக சில திருத்தங்களைச் செய்வதாகக் காட்டிக்கொண்டாலும், பயங்கரவாத தடைச் சட்டம் என்ற ஆயுதத்தை கைகளில் வைத்துக்கொண்டு ஆட்சியைத் தொடர்வதுதான் அரசாங்கத்தின் உபாயம் என்பதும் அரசு முன்வைத்திருக்கும் திருத்தங்கள் மூலமாக புலனாகிறது,**

சர்வதேச நியதிகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கொண்டு வரும் நோக்கத்துடன் திருத்தப்பட்டு வருவதாக அமைச்சர் இதன்போது கூறியுள்ளார். பல மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட நீண்ட கலந்துரையாடலின் பின்னர் பயங்கரவாதத் தடைச் சட்டம் திருத்தப்பட்டு வருவதாக அமைச்சர், இராஜதந்திர அதிகாரிகளுக்கு விளக்கமளித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் உத்தேசத் திருத்தங்கள் அடங்கிய சட்ட மூலத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் இறுதி அங்கீகாரத்திற்காக பாராளுமன்றத்தில் அதனை சமர்பிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. அந்த நிலையில்தான் நோற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அரசாங்கத்தின் திருத்தங்களை உள்ளடக்கிய பிரேரணையை பாராளுமன்றத்தில் முன்வைத்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் முக்கிய திருத்தங்களில் தடுப்புக் காவல் உத்தரவு கட்டுப்பாட்டு உத்தரவு நீதித்துறை மீளாய்வு உத்தரவுகளை வெளிப்படையாக அங்கீகரித்தல் தொடர்பான பிரிவுகளில் திருத்தங்களை மேற்கொள்ளுதல் நீண்ட கால தடுப்புக் காவலில் வைக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான வழக்குகளை விரைவாகத் தீர்த்தல் சுதந்திரத்துக்கு இடையூறு விளைவிக்கும் பிரிவுகளை இரத்துச் செய்தல் நீதிவான்கள் மற்றும் நீதித்துறை மருத்துவ அதிகாரிகளை அணுகுவதற்கான விதிகளை வெளிப்படுத்துதல் மற்றும் அறிமுகப்படுத்துதல் தடுப்புக் காவலில் உள்ள காலத்தில் துஷ்பிரயோகம் மற்றும் சித்திரவதைகளைத் தடுத்தல் குடும்பத்துடன் தொடர்புகொள்வதற்கான உரிமை நீண்ட கால கைதிகளுக்கு பிணை வழங்குதல் மற்றும் வழக்குகளை நாளாந்தம் விசாரணை செய்தல் போன்ற பிரிவுகளிலான திருத்தங்கள் உள்ளடங்கும்.




நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 13ஆவது பிரிவின் கீழ் ஆலோசனை சபையொன்று நிறுவப்படவுள்ளதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். இருந்த போதிலும், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திருத்தச் சட்டத்தில் முக்கியமான கூறுகள் உள்ளடக்கப்படவில்லை என ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, இலங்கை அரசாங்கத்தின் பயங்கரவாத தடைச் சட்டத்தை திருத்துவதற்கான முன்மொழிவுகள் மூலம் அரசாங்கத்தின் மனித உரிமை துஸ்பிரயோகங்கள் முடிவிற்கு வராது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. குறிப்பாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதான ஒருவரை 18 மாதங்கள் வரையில் தடுத்துவைக்க முடியும் என்ற சரத்தை 12 மாதங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. இது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல என்பது மனித உரிமை அமைப்புக்களின் கருத்து.

இதனைவிட பயங்கரவாத தடைச் சட்டத்தில் உள்ள மோசமான அம்சங்களில் ஒன்றாக, குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் உள்ளது. அதாவது, சந்தேக நபர் ஒருவர் பொலிஸாருக்குக் கொடுக்கும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஒரு சாட்சியமாக பொலிஸார் நீதிமன்றத்தில் முன்வைக்க முடியும். இது சித்திரவதை செய்து பெறப்பட்டதாகவும் இருக்க முடியும். இது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்பதுடன், தடுப்புக்காவலில் சித்திரவதைகளுக்கு வழிவகுப்பதாகவும் அமையலாம் என்பது மனித உரிமை அமைப்புக்களின் கருத்து.

ஜெனிவாவும், ஐரோப்பிய ஒன்றியத்தின் இறுக்கமான நிலைப்பாடும் இவ்விடயத்தில் உறுதியாக எதனையாவது செய்தாக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை இலங்கைக்கு கொடுத்துள்ளது. வாக்குறுதிகளைக் கொடுப்பதுடன், கண்துடைப்புக்காக சில திருத்தங்களைச் செய்து இந்த நெருக்கடிகளைத் தாண்டிச் சென்றுவிட முடியும் என்பதுதான் இலங்கை அரசின் திட்டமாகவுள்ளது.

அதற்காகத்தான் ஜெனீவா கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் குறிப்பிட்ட திருத்தங்கள் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் பாராளுமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் எதிர்பார்த்த திருத்தங்களோ, ஜெனீவா தீர்மானத்தில் சொல்லப்பட்ட விடயங்களோ இதில் இல்லை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் சில சரத்துக்களைக் கைகளில் வைத்துக்கொண்டு ஆட்சியைத் தொடர்வதுதான் இலங்கை அரசின் திட்டம் என்பதும் தெளிவாக புலனாகின்றது.



# நியாண்டர்தால் மனிதர்கள் - நவீன மனிதர்கள் நீண்ட காலம் சேர்ந்து வாழ்ந்தனர்!?

## புதிய கண்டுபிடிப்பு வெளிப்படுத்துவது என்ன?

**பல்லப் கோஷ்**

தற்போது கிடைத்துள்ள புதிய புதைபடிவங்கள், நவீன மனிதர்கள் ஆபிரிக்காவிலிருந்து வந்தவுடன் நியாண்டர்தால்களை அழித்துவிட்டார்கள் என்ற கருத்தை கேள்விக்கு உட்படுத்துகின்றன.

தெற்கு பிரான்சில் உள்ள குகை ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு குழந்தையின் பல் மற்றும் கல் கருவிகள், சுமார் 54,000 ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கு ஐரோப்பாவில் ஹோமோ சேபியன்ஸ் (தற்கால மனித இனம்) இருந்ததாகக் கூறுகிறது.

இது முன்பு நினைத்ததைவிடப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தையது. இரண்டு இனங்களும் நீண்ட காலத்திற்கு ஒன்றாக இருந்திருக்கலாம் என்பதை இது காட்டுகிறது.

இந்த ஆய்வு 'சயின்ஸ் அட்வான்சஸ்' சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

டுலூஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் லுடோவிச் ஸ்லிமேக் தலைமையிலான குழுவால் ரோன் பள்ளத்தாக்கில் உள்ள க்ராட்டே மேண்ட்ரின் என்ற குகையில் இவை கண்டு பிடிக்கப்பட்டன. முன்கூட்டியே நவீன மனிதர்கள் குடியேறியதற்கான சான்றுகள் இருப்பதை அறிந்தபோது ஸ்லிமாக் ஆச்சர்யப்பட்டார்.

"நாங்கள் எதிர்பார்த்த 12,000 ஆண்டுகளுக்கு முன்பே ஹோமோ சேபியன்கள் வந்து சேர்ந்தனர் என்பதை இப்போது எங்களால் நிரூபிக்க முடிகிறது. அதன் பிறகு இந்த மக்கள் தொகை மற்ற நியாண்டர்தால் மக்களால் இடம் மாற்றப்பட்டது. மேலும் இது நம்முடைய வரலாற்று நூல்கள் அனைத்தையும் திருத்தி எழுத வைக்கிறது."

நியாண்டர்தால் இன மனிதர்கள் ஐரோப்பாவில் 4 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே வந்தனர். ஆப்பிரிக்காவில் இருந்து ஹோமோ சேபியன்ஸ் ஐரோப்பிய கண்டத்திற்கு வந்த சிறிது காலத்திற்குப் பிறகு, அதாவது சுமார் 40,000 ஆண்டுகளுக்கு முன்பு நியாண்டர்தால் மனிதர்கள் அழிந்துவிட்டதாகத் தற்போதைய கோட்பாடு கூறுகிறது.

ஆனால், புதிய கண்டுபிடிப்பு நம்முடைய மனித இனம் முன்னதாகவே வந்துவிட்டதாகவும் நியாண்டர்தால் மனிதர்கள் அழிந்து போவதற்கு முன்பு சுமார் 10,000 ஆண்டுகளுக்கும் மேலாக ஐரோப்பாவில் இரண்டு இனங்களும் ஒன்றாக இருந்திருக்கலாம் என்றும் கூறுகிறது.

லண்டனில் உள்ள இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தின் பேராசிரியர் கிறிஸ் ஸ்ட்ரிங்கர் கூற்றுப்படி, இது நம்முடைய மனித இனம் விரைவாக நியாண்டர்தால் மனிதர்களை அழித்துவிட்டது என்ற தற்போதைய பார்வையை கேள்விக்கு உட்படுத்துகிறது.

"இது நவீன மனிதர்களால் ஒரே இரவில் கையகப்படுத்தப்படவில்லை," என்று அவர் பிபிசி நியூசிடம் கூறினார். மேலும், "சில நேரங்களில் நியாண்டர்தால்களுக்கு நன்மைகள் இருந்தன. சில நேரங்களில் நவீன மனிதர்களுக்கு நன்மைகள் இருந்தன. எனவே அது மிகவும் நேர்த்தியாக சமநிலையில் இருந்தது" என்று கூறினார்.

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அந்த இடத்தில் பல அடுக்குகளில் புதைபடிவ ஆதாரங்கள் இருந்ததைக் கண்டறிந்தனர். அவர்கள் எவ்வளவு கீழே தோண்டினார்களோ, காலச் சக்கரத்தில் அவ்வளவு பின்னால் அவர்களால் பார்க்க முடிந்தது. மிகக் குறைந்த அடுக்குகள் சுமார் 20,000 ஆண்டுகளாக இந்தப் பகுதியை ஆக்கிரமித்திருந்த நியாண்டர்தால் மனிதர்களின் எச்சங்களைக் காட்டின.

ஆனால், அவர்களை முற்றிலும் ஆச்சர்யப்படுத்தும் விதமாக, சுமார் 54,000 ஆண்டுகளுக்கு முந்தைய ஒரு அடுக்கில் நவீன மனித இனத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையின் பல்லை இந்தக் குழு கண்டறிந்தது. மேலும், நியாண்டர்தால்களுடன் தொடர்பில்லாத வகையில் செய்யப்பட்ட சில கல் கருவிகளையும் அவர்கள் கண்டறிந்தனர்.

இந்த ஆரம்பக்கால மனித குழு, அந்த இடத்தில் சுமார் 2,000 ஆண்டுகள் அளவிலான ஒரு குறுகிய காலத்திற்கு வாழ்ந்ததாக ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. அதற்குப் பிறகு அந்த இடம் ஆக்கிரமிக்கப்படாமல் இருந்தது.

> **லண்டனில் உள்ள இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தின் பேராசிரியர் கிறிஸ் ஸ்ட்ரிங்கர் கூற்றுப்படி, இது நம்முடைய மனித இனம் விரைவாக நியாண்டர்தால் மனிதர்களை அழித்துவிட்டது என்ற தற்போதைய பார்வையை கேள்விக்கு உட்படுத்துகிறது.**

44,000 ஆண்டுகளுக்கு முன்பு நவீன மனிதர்கள் திரும்பி வரும் வரை, நியாண்டர்தால்கள் மீண்டும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு அந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டனர்.

"நாம் இப்படி தோன்றி, மறைந்து தோன்றியிருக்கிறோம்," என்கிறார் பேராசிரியர் ஸ்ட்ரிங்கர். "நவீன மனிதர்கள் குறைந்த காலத்திற்குத் தோன்றினார்கள். பின்னர் ஓர் இடைவெளி உள்ளது. அங்கு நிலவிய காலநிலை அவர்களை அழித்திருக்கலாம். பிறகு நியாண்டர்தால் மனிதர்கள் மீண்டும் வந்தார்கள்."

மற்றொரு முக்கிய கண்டுபிடிப்பு என்னவெனில், குழந்தையின் பல் இருந்த அதே அடுக்கில் காணப்படும் கல் கருவிகள் நவீன மனிதர்களுடன் தொடர்புடையதாக இருந்தது. அதே வழியில் செய்யப்பட்ட கருவிகள் ரோன் பள்ளத் தாக்கு மற்றும் லெபனான் போன்ற வேறு சில இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால், இதுவரை விஞ்ஞானிகளுக்கு எந்த மனித இனத்தவர் அவற்றை உருவாக்கினார்கள் என்று உறுதியாகத் தெரியவில்லை.

சில சிறிய கருவிகள் அம்பு முனைகளாக இருக்கலாம் என்று ஆய்வாளர்களில் சிலர் ஊகிக்கின்றனர். நவீன மனிதர்களின் தொடக்க காலக் குழு, வில் மற்றும் அம்புகளின் மேம்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தியது. இந்தக் குழு 54,000 ஆண்டுகளுக்கு முன்பு நியாண்டர்தால் மனிதர்களை வென்றதற்கான காரணங்களில் ஒன்றாக இது இருக்கலாம். ஆனால், அப்படியிருந்தால், அது ஒரு தற்காலிக சாதக நிலையே. ஏனெனில், நியாண்டதால் மனிதர்கள் மீண்டும் திரும்பி வந்தார்கள். உறுதி செய்யப்பட்டால், இது முக்கியமான கண்டுபிடிப்பு.

எனவே, நம் நவீன மனித இனம் அவர்களை உடனடியாக அழித்துவிடவில்லை என்றால், இறுதியில் நமது இனத்தின் வெற்றிக்கு காரணமாக இருந்த சாதகம் என்ன?

கலை, மொழியை உருவாக்கும் நம்முடைய திறன் மற்றும் சிறந்த மூளை இதற்கு காரணமாக இருக்கலாம் என்பன போன்ற பல கருத்துகளை விஞ்ஞானிகள் முன்வைக்கின்றனர். ஆனால் நாம் சிறந்த முறையில் ஒருங்கிணைந்து செயல்படும் இனமாக இருந்ததால்தான் இது நடந்தது என்று பேராசிரியர் ஸ்ட்ரிங்கர் நம்புகிறார்.

"நாம் சிறப்பாக ஒருங்கிணைந்தோம், நம் சமூகக் குழுக்கள் பெரியதாக இருந்தன. நாம் அறிவை சிறப்பாகச் சேமித்து வந்தோம், நாம் அந்த அறிவின் அடிப்படையிலேயே வளர்ச்சியை எய்தினோம்," என்று அவர் கூறுகிறார்.

நவீன மனிதர்கள் நீண்ட காலம் நியாண்டர்தால் மனிதர்களோடு ஊடாடி வாழ்ந்தார்கள் என்ற இந்த கருத்து, நவீன மனிதர்கள் உடலில் சிறிய அளவில் நியாண்டர்தால் டி.என்.ஏ. கலப்பு உள்ளது என்ற 2010ம் ஆண்டின் கண்டுபிடிப்போடு பொருந்திப் போகிறது. இந்த இரண்டு இனங்களும் சேர்ந்து இனப்பெருக்கம் செய்ததையும் இது காட்டுகிறது என்கிறார் பேராசிரியர் ஸ்ட்ரிங்கர்.

"இது இரண்டு தரப்புக்கும் இடையில் நிகழ்ந்த அமைதியான பரிமாற்றமா என்பது தெரியாது. ஒருவேளை மற்றொரு குழுவிலிருந்து ஒரு பெண்ணைக் கொண்டு வந்திருக்கலாம். இல்லையேல் கைவிடப்பட்ட அல்லது அனாதையாக்கப்பட்ட நியாண்டர்தால் குழந்தைகளைத் தத்தெடுத்து இருக்கலாம்," என்று அவர் கூறுகிறார்.

"அவை அனைத்துமே கூட நடந்திருக்கலாம். எனவே முழு கதையும் நமக்கு இன்னும் தெரியவில்லை. ஆனால், அதிக தரவு மற்றும் அதிக டி.என்.ஏ, அதிக கண்டுபிடிப்புகள் மூலம், நியாண்டர்தால் சகாப்தத்தின் முடிவில் நிஜமாகவே என்ன நடந்தது என்பதைப் பற்றிய உண்மையை நெருங்குவோம்."

- பி.பி.சி.



# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

**மாதிரிப் பரீட்சை வினாத்தாள்**

**03) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

1) அந்தப் பாலம் மிகவும் ..........................................( நீலம் / நீளம்) ஆனது.

2) நாங்கள் ஞாயிற்றுக்கிழமை கடற்..........................................ச்(கறைக்கு/கரைக்கு) சென்றோம்.

(2 x 1 =2 புள்ளிகள்)

**04) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.**

1) அந்தப் பாறையில் குரங்கு மான் சிங்கம் ஆகியவற்றின் உருவங்கள் கூட செதுக்கப்பட்டுள்ளன.

2) ஐயா பேருந்து நின்று விட்டதே.

(2 x 1 =2 புள்ளிகள்)

**05) பின்வரும் பன்மை வாக்கியத்தை ஒருமை வாக்கியமாக மாற்றி எழுதுக.**

1. யானைகள் ஆடி அசைந்து வந்தன.

..........................................................................................

(1 புள்ளி)


**06) பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்து எழுதுக.**

1) கேட்காத கடனும் ..........................................

2) அடர விதைத்து சிதறப்..........................................

(2 x 1 =2 புள்ளிகள்)


❖ **பழங்களின் விலைகளை அவதானித்து விடை எழுதுக.**




07. மூன்று பழங்களிலும் ஒவ்வொன்று வாங்கத் தேவையான பணம் எவ்வளவு?

1) ரூபாய் 42.00 2) ரூபாய் 47.00 3) ரூபாய் 41.00

08. பின்வரும் குறியீடுகளிற்குரிய பெறுமானங்களை அவதானித்து வெற்றிடத்திற்குப் பொருத்தமான குறியீடு இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க?




09. ஆங்கில எழுத்துக்களும் அவற்றின் பெறுமானங்களும் தரப்பட்டுள்ளன. அதனை அவதானித்து ரூ. 5481 என்பது குறிக்கும் சரியான ஆங்கில எழுத்து வடிவத்தைத் தெரிவு செய்க.

R. ADEH → ரூ. 6158
R. GBFD → ரூ. 7421
R. AFHE → ரூ. 6285

1) R. EBHC 2) R. EBFD 3) R. EBHD

10. மாலாவிற்கு 8 வயதாக இருக்கும்போது அவளது அப்பாவின் வயது 32 ஆகும். மாலாவின் வயது இரு மடங்கான போது அவளது அப்பாவின் வயது யாது?

1) 64 2) 40 3) 16

11. ஒரு வரிசையில் 25 மாணவர்கள் உள்ளனர். குமரன் அவ்வரிசையில் நடுவில் உள்ளான். குமரனுக்குப் பின்னால் ஆறாவதாக கண்ணன் நின்றான் எனின், கண்ணனுக்கும் குமரனுக்கும் இடையில் எத்தனை பேர் உள்ளனர்.

1) 6 2) 7 3) 5

12. கிணறு ஒன்றை வெட்டுவதற்கு 5 மனிதர்களுக்கு 12 நாட்கள் எடுத்தன. அவ்வேலையை 6 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பார்கள்.

1) 10 நாட்கள் 2) 6 நாட்கள் 3) 60 நாட்கள்

## விடைகள்

**03.** i) நீளம் ii) கரைக்கு

**04.** 1) அந்தப்பாறையில் குரங்கு, மான், சிங்கம் ஆகியவற்றின் உருவங்கள் கூட செது

2) ஐயா! பேருந்து நின்று விட்டதே.

**05.** 1) யானை ஆடி அசைந்து வந்தது.

**06.** 1) "கேட்காத கடனும் பார்க்காத பயிரும் பாழ்"

2) அடர விதைத்து சிதறப் பிடுங்க வேண்டும்.

**07.** 1) சக்கரவர்த்தி

**08.** 1) ஒருவர்க்குச் 2) எழுத்துப்

**09.** 1) தபாற் பெட்டி இலக்கம் 2) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**10.** 1) மறைவான தன்மை

**11.** 1) ✓ 2) ✗ 3) ✗ 4) ✓

**12.** பொருத்தமான வாக்கியம்

## கல்வி tv CHANNEL-1

**12.02.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**12.02.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |




# கல்முனை பொலிஸில் ஆண்டு பரிசோதனை!

கல்முனை, பெப். 12

கல்முனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் புதிய ஆண்டுக்கான பரிசோதனை நேற்று இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் லசந்த புத்திகவின் நெறிப்படுத்தலில் வியாழக்கிழமை கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். றம்சின் பக்கீர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம். ஜெயந்த ரட்நாயக்க கலந்துகொண்டார்.

மேலும், பொலிஸாரால் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொலிஸ் சேவை பிரிவு நிலையங்கள், சுற்று சூழல், பொலிஸ் உத்தியோகத்தர்களின், தங்குமிட அறைகளை பார்வையிட்டதுடன், பொலிஸார் பயன்படுத்தும் வாகானங்களையும் பரிசோதித்தார். (ஐ)



# குமுக்கன் ஆற்றங்கரையில் காளி அம்பாள் பிரதிஷ்டை!

மட்டக்களப்பு, பெப். 12

1,400 கிலோ எடையுள்ள மாபெரும் காளி அம்பாள் விக்கிரகம் கிழக்கின் தென் எல்லையிலுள்ள குமுக்கன் ஆற்றுப் படுக்கையிலுள்ள குமுக்கன் மடத்தடி அம்மன் கோவில் வளாகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

வன அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்பில், அவர்களின் நேரடி வழிகாட்டலில், குமண சரணாலயத்தில் மாபெரும் சக்தி பீடமாக விளங்குகின்ற குமுக்கன் ஆற்றங்கரையின் மடத்தடி அம்மன் கோவிலில் காளி தேவியின் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

சித்தர்களின் குரல் அமைப்பின் பிரதானி சிவசங்கர் ஜீ இதனை பிரதிஷ்டை செய்து வைத்தார்.

அவருக்கு உதவியாக இலங்கையின் சித்தர்களின் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், துணைத் தலைவர் மனோகரன் சிவயோகி மகேஸ்வரன் சுவாமிகள் உள்ளிட்ட பக்தர்கள் பங்களித்தனர். (ஐ)

# சுருக்கவலைகளைப் பயன்படுத்த அனுமதிப் பத்திரங்களை வழங்குக!

திருகோணமலை, பெப். 12

திருகோணமலை மாவட்ட மீனவர்களுக்கான சுருக்குவலை அனுமதிப்பத்திரங்களை உடனடியாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

புத்தளம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் சுருக்கு வலைக்கான அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இருந்தும் இதுவரை திருகோணமலை மாவட்டத்தில் இந்த அனுமதிப் பத்திரங்களை விநியோகிப்பதற்கான அனுமதி திருகோணமலை மீன்பிடி திணைக்கள உதவி பணிப்பாளருக்கு வழங்கப்படவில்லை. கடைசியாக 2019 ஆம் ஆண்டே இந்த அனுமதி பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

கடந்த இரண்டு வருடகாலமாக இந்த அனுமதி கிடைக்காததால் நூற்றுக்கணக்கான மீனவர்கள் தமது தொழில் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். இதனால் பலர் கடற்படையினரால் கைதும் செய்யப்படுகின்றனர்.

எனவே, புத்தளம் மற்றும் மன்னார் பகுதிகளை போன்று திருகோணமலையிலும் இந்த அனுமதிப் பத்திரங்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு அனுமதியை வழங்குமாறு தெரிவித்தார். (ஐ)

# தனியாருக்கு அரச காணி பொதுமக்கள் கூடி எதிர்ப்பு

கல்முனை, பெப். 12



கல்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கல்முனை 1சி கிராம சேவகர் பிரிவு மயான வீதியில் அமைந்துள்ள அரச காணியில் தனியார் அமைப்பினருக்கு வழங்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினமும் மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கல்முனை மாநகர சபை உறுப்பினர் எஸ். ராஜனின் ஏற்பாட்டில் பிரதேச மதகுருமாரின் ஒத்துழைப்புடன் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதில், பிரதேச பொது மக்கள், கிராம, மாதர் அபிவிருத்திச் சங்கத்தினர் முதியோர் அமைப்பினர், மீனவர் சங்கத்தினர் எனப் பலதரப்பட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

குறிப்பிட்ட காணி அமைந்துள்ள இடத்தில் ஆரம்பித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் வரையில் பேரணியாக இடம்பெற்று பின்னர் பிரதேச செயலகம் முன்னாள் ஆர்ப்பாட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

இது குறித்து, பிரதேச செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில், குறிப்பிட்ட காணி கல்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவின் ஆளுகைக்கு உட்பட்டு இருப்பினும் மேற்படி காணி தனியார் அமைப்பொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் தான் அறியவில்லையெனவும் இது குறித்து மாவட்ட செயலாளருடன் தொடர்பு கொண்டு பின்னர் அறிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்த விடயத்துக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை தாங்கள் இவ்விடம் விட்டுச் செல்லப் போவதில்லை என போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் தெரிவித்தனர். அத்துடன், மக்களின், பொது அமைப்புகளின் கோரிக்கைகள் அடங்கிய மகஜரும் உரிய பொது அமைப்புகளின் பிரதிநிதிகளால் வழங்கிவைக்கப்பட்டது.

மேற்படி அரச காணி தொடர்பில் அப்பிரதேசத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொது அமைப்புகளின் பயன்பாட்டிற்காக பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் அது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் ஆதாய நோக்கம் கருதிய கட்டட நிர்மாண சங்கத்திற்கு தற்போது வழங்கியிருப்பதானது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத விடயம் என்ற கோரிக்கையை முன்வைத்தே பொது அமைப்புகள் இப்போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

எனினும், இந்தக் காணி தனியாருக்கு வழங்கப்படாது என்ற உத்தரவாதத்தை அரச அதிபர் வழங்கினார் என்று பிரதேச செயலாளர் அளித்த வாக் குறுதிக்கு அமைய இந்தப் போராட்டம் நிறைவுக்கு வந்தது. (ஐ)

# காரைதீவு விஷ்ணு வித்திக்கு பழைய மாணவர் அன்பளிப்பு

காரைதீவு, பெப். 12



காரைதீவு விஷ்ணு வித்தியாலயத்தின் பழைய மாணவரான சிவானந்தன்(கனடா) தனது தந்தையின் பெயரில் இயக்கும் மார்க்கண்டு சமூக அறக்கட்டளையின் அனுசரணையுடன் குறித்த பாடசாலைக்கு அலுவலக உபகரணங்கள் மற்றும் அதிபர் ஆசிரியர்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

இந்த நிகழ்வு அண்மையில் வித்தியாலய அதிபர் திருமதி. கலைவாணி தம்பிராசா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக திருமதி இலட்சுமிஅம்மாள் மார்க்கண்டு மற்றும் சிறப்பு அதிதிகளாக மார்க்கண்டு சிதம்பரநாதன், க. தட்சணாமூர்த்தி, மா.வித்தியானந்தன் மற்றும் ஆசிரியர்கள்குடும்ப உறுப்பினர்கள் மாணவர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

இந்த அமைப்பானது கடந்த கொரோனா காலங்களில் காரைதீவு, அட்டைப்பள்ளம், திராய்க்கேணி போன்ற கிராமங்களில் வாழ்வாதாரத்தை இழந்த குடும்ப உறவுகளுக்கு உணவுப் பொதிகள் மற்றும் உதவிகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உக்ரைன் மீது ரஷ்யா எந்நேரமும் போர் தொடுக்கும் ஆபத்து நிலை!

## அமெரிக்கர்களை உடனடியாக வெளியேறுமாறு அறிவுறுத்து



நியூயோர்க், பெப். 12

உக்ரைன் மீது ரஷ்யா எந்நேரமும் தாக்குதல் நடத்தக் கூடிய அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதால் உக்ரைனில் தங்கியுள்ள அனைத்து அமெரிக்கர்களும் உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவுறுத்தியுள்ளார்.

உக்ரைனை ரஷ்யா ஆக்கிரமித்தால் அமெரிக்கர்களை மீட்க படைகளை அனுப்பமாட்டேன் எனவும் பைடன் கூறினார். உக்ரைன் - ரஷ்யா இடையிலான பதற்ற நிலை விரைவில் மோசமான கட்டத்தை அடையலாம் என்றும் அவர் எச்சரித்தார்.

உக்ரைன் எல்லையில் 100,000 துருப்புக்களை ரஷ்யா குவித்துள்ளது. அத்துடன், அண்டை நாடான பெலாரஸுடன் பாரிய இராணுவப் பயிற்சிகளை ஆரம்பித்துள்ளது.

மேலும் தனது நாட்டின் கடல் வழி அணுகலை முடக்கும் வகையில் நாட்டைச் சுற்றியுள்ள கடல் பிராந்தியங்களை ரஷ்யா முற்றுகையிட்டுள்ளதாக உக்ரைன் குற்றஞ்சாட்டியுள்ளது. இதற்கிடையே முன்னாள் சோவியத் ஒன்றிய நாடாக இருந்து பிரிந்து சென்ற உக்ரைன் நேட்டோ கூட்டணிப் படையில் இணையாது என்பதை உறுதி செய்ய விரும்புவதாக ரஷ்யா அறிவித்துள்ளது. இவ்வாறான பதற்றங்களுக்கு மத்தியிலேயே உக்ரைன் மீது ரஷ்யா எந்த நேரமும் தாக்குதல் நடத்த கூடிய அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதால் உக்ரைனில் தங்கியுள்ள அனைத்து அமெரிக்கர்களும் உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவுறுத்தியுள்ளார்.

அமெரிக்க வெளியுறவுத் துறையும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி உள்ளது.

உலகின் மிகப்பெரிய படைகளில் ஒன்றை நாங்கள் கையாள்கிறோம். இது மிகவும் வித்தியாசமான சூழ்நிலையை உருவாக்கும். நிலைமை எந்நேரத்திலும் மோசமடையலாம் என ஜோ பைடன் எச்சரித்தார்.

இதேவேளை, திடீர் மோதல் ஒன்று ஏற்பட்டால் உக்ரைனில் சிக்கும் அமெரிக்கர்களை மீட்க துருப்புக்களை அனுப்பும் சூழல் உள்ளதா? என செய்தியாளர்கள் கேட்டதற்கு பதிலளித்த பைடன், அமெரிக்காவும் - ரஷ்யாவும் மோதத் தொடங்கினால் நிலைமை மோசமாகிவிடும். இது ஒரு உலகப் போராக மாறலாம். இதன்போது அமெரிக்கர்களை மீட்க படைகளை அனுப்பும் சாத்தியம் இருக்காது என்றார். இதற்கிடையில் உக்ரைன் - ரஷ்யா போரை தவிர்க்க மிகத் தீவிரமான இராஜதந்திர முயற்சிகளை பல்வேறு உலக நாடுகளின் தலைவர்கள் முன்னெடுத்து வருகின்றனர். மோதலை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கில் பிரெஞ்சு மற்றும் ஜேர்மன் அதிகாரிகளுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் எந்த முன்னேற்றமும் இல்லை என ரஷ்யாவும் உக்ரைனும் கடந்த வியாழக்கிழமை அறிவித்தன.

சோவியத் ஒன்றியம் கடந்த 1991ஆம் ஆண்டில் சிதறுண்டபோது அதில் அங்கமாக இருந்த உக்ரைன் தன்னை சுதந்திர நாடாக அறிவித்துக்கொண்டது.

சுமார் 30 சதவீதத்தினர் ரஷ்ய மொழி பேசும் அந்த நாட்டில் ஐரோப்பிய செல்வாக்கு அதிகரித்துவிடக்கூடாது என்பதில் ரஷ்யா உறுதியாக உள்ளது. நேட்டோ அமைப்பில் உக்ரைனை உறுப்பினராக இணைக்கக்கூடாது என்றும் உக்ரைனில் நேட்டோ நிலைகள் அமைக்கப்படக்கூடாது என்றும் ரஷ்யா திட்டவட்டமாக கூறி வருகிறது. (அ)



# உக்ரைன் கடல் பிராந்தியங்களை சுற்றிவளைத்து ரஷ்யா முற்றுகை!

கிவி, பெப். 12

தனது நாட்டின் கடல் வழி அணுகலை முடக்கும் வகையில் நாட்டைச் சுற்றியுள்ள கடல் பிராந்தியங்களை ரஷ்யா முற்றுகையிட்டுள்ளதாக உக்ரைன் குற்றஞ்சாட்டியுள்ளது. உக்ரைனுடனான தனது எல்லையில் ரஷ்யா ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட படைகளைக் குவித்துள்ளதால் ஏற்பட்டுள்ள பதற்றத்துக்கு மத்தியில் இந்தக் கருத்தை உக்ரைன் வெளியிட்டுள்ளது. அசோவ் கடல் முழுவதும் முடக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கருங்கடலில் பெருமளவு பகுதிகளை அணுக முடியாவதாறு ரஷ்யா முற்றுகையிட்டுள்ளது என உக்ரைன் வெளியுறவு அமைச்சர் டிமிட்ரோ குலேபா தெரிவித்தார்.

உக்ரைன் மீது படையெடுக்கும் திட்டம் ஏதும் இல்லை என ரஷ்யா மீண்டும் -மீண்டும் கூறி வருகிறது. அதேநேரம் உக்ரைன் எல்லையில் சுமார் இலட்சம் படைகளை தொடர்ந்து நிலைநிறுத்தியுள்ளது. இவ்வாறான பதற்றங்களுக்கு மத்தியில் உக்ரைனின் வடக்கில் உள்ள தனது நெருங்கிய நட்பு நாடான பெலா ரஸ் உடன் இணைந்து 10 நாட்கள் கூட்டு இராணுவப் பயிற்சியை ரஷ்யா கடந்த வியாழக்கிழமை தொடங்கியது.

இதில் சுமார் 30,000 ரஷ்ய துருப்புக்கள் பங்கேற்றுள்ளதாக நம்பப்படுகிறது. இது பதற்ற நிலையை மேலும் அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், தற்போது பெலாரஸில் நிறுத்தப்பட்டுள்ள ரஷ்ய துருப்புக்கள் பயிற்சிகளுக்குப் பிறகு தங்கள் நிரந்தர தளங்களுக்கு திரும்புவார்கள் என ரஷ்ய ஜனாதிபதி மாளிகையான கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் சிசோவ் தெரிவித்தார்.

(அ)

# வெள்ளிக் கிரகத்தை படம் பிடித்த நாஸா!



'நாஸா' அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனத்தின், 'பார்க்கர்' விண்கலம், வெள்ளி கிரகத்தின் மேற்பரப்பை மிக தெளிவாக படம் பிடித்து அனுப்பி உள்ளது.

சூரியனின் வெளிப்புறத்தை ஆய்வு செய்வதற்காக, 'பார்க்கர்' விண்கலத்தை, நாசா 2018இல் விண்ணில் ஏவியது. இது 2025 இல் சூரியனுக்கு மிக அருகில் சென்று ஆய்வு மேற்கொள்ளும் என, எதிர்பார்க்கப்படுகிறது. சூரியனுக்கு மிக அருகே வெள்ளிக்கிரகம் உள்ளது. இந்நிலையில், சூரியனை நெருங்கிக் கொண்டிருக்கும் பார்க்கர் விண்கலம் வெள்ளிக்கிரகத்தை கடக்கையில், அதன் மேற்புறத்தை ஏற்கனவே மூன்று முறை புகைப்படம் எடுத்துள்ளது.

ஆனால், வெள்ளிக்கிரகத்தின் மேற்புறத்தில் உள்ள அடர்த்தியான மேக கூட்டங்களால், அதன் மேற்புற காட்சிகள் சரிவர பதிவாகாமல் இருந்தன. சமீபத்தில் நான்காவது முறையாக வெள்ளி கிரகத்தை பார்க்கர் விண்கலம் கடந்தது. அப்போது, அதன் மேற்புறம் மிக தெளிவாக படம் பிடிக்கப்பட்டுள்ளது. இது வெள்ளிக் கிரகம் குறித்த ஆய்வில் மிகப் பெரிய முன்னேற்றமாக பார்க்கப்படுகிறது.

'இதன் வாயிலாக, வெள்ளிக் கிரகத்தின் தட்ப வெப்பம், அங்கு உள்ள வளங்கள், மண்ணின் தன்மை, எரிமலைகள் குறித்து மேலும் துல்லியமாக ஆய்வு செய்ய, இந்த புகைப் படம் பேருதவியாக இருக்கும்' என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

(அ)

# சவுதி - அபா விமான நிலைய தாக்குதல் முயற்சி முறியடிப்பு

## ட்ரோன் சிதைவுகளினால் இலங்கையர் உட்பட 12 பேர் காயம்



றியாத், பெப். 12

சவுதி அரேபியாவின் அபா விமான நிலையத்தில் தாக்குதல் நடத்த வந்த வெடிகுண்டு நிரப்பிய ட்ரோன் சுட்டு வீழ்த்தப்பட்ட நிலையில் ட்ரோன் சிதைவுகள் தாக்கியதில் இலங்கையர் உட்பட 12 பேர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை சுட்டு வீழ்த்தப்பட்ட ட்ரோன் சிதைவுகளால் 12 பேர் காயமடைந்ததாக சவுதி தலைமையிலான கூட்டணிப் படைகள் உறுதி செய்துள்ளன.

அபா விமான நிலையத்தில் உள்ள இராணுவ நிலையை காசெப் 2 ட்ரோன் மூலம் தாங்கள் தாக்கியதாக ஹவுதி இராணுவ செய்தித் தொடர்பாளர் யாஹ்யா சரியா உரிமை கோரினார்.

இதேவேளை, வெடிபொருட்கள் நிரப்பிய ட்ரோனை தாக்கி அழித்ததை தொடர்ந்து அபா விமான நிலையத்தின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. அங்கு சிவில் விமானப் போக்குவரத்து நடவடிக்கை இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது என சவுதி தலைமையிலான கூட்டணி தெரிவித்துள்ளது. தாக்கி அழிக்கப்பட்ட ட்ரோன் சிதைவுகள் விமான நிலைய வளாகத்திற்குள் விழுந்ததில் சிறிய ளவான சேதங்கள் ஏற்பட்டன. ட்ரோன் சிதைவு கள் தாக்கியதில் இரண்டு சவுதி பிரஜைகள் மற் றும் இலங்கை, பங்களாதேஷ், நேபாளம், இந்தியா, பிலிப்பைன்ஸ் பிரஜைகளுக்கும் சிறிய காயங்கள் ஏற்பட்டன.

இதேவேளை, இந்த ட்ரோன் தாக்குதலை அமெரிக்கா கண்டித்துள்ளது. சவுதி அரேபியாவில் உள்ள அமெரிக்கர்கள் மற்றும் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதில் அக்கறை கொண்டுள்ளதாக அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் கூறினார்.

யேமனில் அரசுக்கு எதிராக போராட்டங்களில் ஈடுபட்டுள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்களை கட்டுப்படுத்த உதவும் வகையில் சவுதி அரேபியா உள்ளிட்ட கூட்டணிப் படைகள் யேமனுக்கு இராணுவ ரீதியான உதவிகளை வழங்கி வருகிறன. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சவுதி அரேபியாவின் எல்லை மாகாணங்கள் மீது அடிக்கடி ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களை ஹவுதி கிளர்ச்சி யாளர்கள் நடத்தி வருகின்றனர்.

கடந்த ஜனவரி 17-ஆம் திகதி அபுதாபியில் கிளர்ச்சியாளர்கள் ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல் நடத்தியதில் மூன்று தொழிலாளர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)



# தந்தையின் வழியில் தனயனும் 'தங்கம்'

பீஜிங், பெப். 12

பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் அல்பைன் பனிச்சறுக்கு போட்டியில் ஆஸ்திரியாவின் ஜோஹன்னஸ் ஸ்டிரோல்ஸ், தனது தந்தை ஹூபர்ட் ஸ்டிரோல்ஸ் போல தங்கப் பதக்கம் வென்றார்.

சீனாவின் பீஜிங்கில், 24ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டி நடக்கிறது. ஆண்களுக்கான அல்பைன் பனிச்சறுக்கு போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இதில் 'டவுன்ஹில்', 'ஸ்லாலோம்' என, இரு வகையான போட்டிகள் நடந்தன.

டவுன்ஹில்' பிரிவில் இலக்கை ஒரு நிமிடம், 43.87 வினாடியில் கடந்த ஆஸ்திரியாவின் ஜோஹன்னஸ் ஸ்டிரோல்ஸ், 'ஸ்லாலோம்' பிரிவில் பந்தய துாரத்தை 47.56 விநாடியில் கடந்தார். ஒட்டுமொத்தமாக 2 நிமிடம், 31.43 விநாடியில் இலக்கை அடைந்த ஜோஹன்னஸ் ஸ்டிரோல்ஸ், முதலிடம் பிடித்து தங்கப் பதக்கத்தை தட்டிச் சென்றார்.

இதன்மூலம் தந்தை வழியில் தங்கம் வென்றார் ஜோஹன்னஸ். கடந்த 1988 இல் கனடாவில் நடந்த குளிர்கால ஒலிம்பிக் அல்பைன் பனிச்சறுக்கு போட்டியில் பிரிவில் இவரது தந்தை ஹூபர்ட் ஸ்டிரோல்ஸ் தங்கப் பதக்கம் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கான் அணியின் வீரர்கள் பிரிட்டனில் புகலிட கோரிக்கை!



லண்டன், பெப். 12

மேற்கிந்தியத் தீவுகளில் அண்மையில் நிறைவடைந்த 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்கேற்றிருந்த 19 வயதுக்கு உட்பட்ட ஆப் கானிஸ்தான் கிரிக்கெட் குழாத்தில் இடம் பெற்றிருந்த நால்வர் ஆப்கானிஸ்தானுக்கு திரும்ப வில்லை எனவும் அவர்கள் நால்வரும் ஐக்கிய இராச்சியத்தில் புகலிடம் கோரியுள்ளனர் எனவும் வெளிநாட்டுச் செய்திகள் தெரிவித்தன.

மேற்கிந்தியத்தீவுகளில் கடந்த 5ஆம் திகதின்று 19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ணத் தொடர் நிறைவடைந்தது. இந்தத் தொடரில் பங்கேற்றிருந்த ஆப்கானிஸ்தான் அணி 4 ஆவது இடத்தை பிடித்தது. இத்தொடர் முடிந்ததும், லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் ஆப்கான் குழாத்தினர் இறங்கியுள்ளனர். பொதுவாக நீண்ட தூர பயணத்தின் போது மற்றுமொரு நாட்டில் தரையிறக்கப்பட்டு செல்வார்கள். இதில் ஐக்கிய இராச்சிய சட்டத்தின்படி அந்நாட்டில் டிரான்சிஸ்ட் வீசா 48 மணி நேரங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்ட குறித்த நால்வரும் ஐக்கிய இராச்சியத்தில் புகலிடம் கோரியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு புகலிடம் கோரியுள்ளவர்களில் குழாத்தில் அங்கம் வகிக்கும் மூவர் அடங்கலாக மேலதிக ஒரு வீரரும் அடங்குவார் என்று தெரிய வருகின்றது. இவர்களின் டிரான்சிஸ்ட் வீசா கடந்த 8 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி, விளையாட்டு வீரர்கள் உள்ளிட்ட ஒரு இலட்சத்திற்கும் அதிகமான ஆப்கானியர்கள் வெளிநாடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# அதிக விலை பெறுபவர் யார்? ஐ.பி.எல். ஏலம் இன்று ஆரம்பம்!




புதுடில்லி, பெப். 12

15ஆவது ஐ. பி. எல். இருபது - 20 போட்டி எதிர்வரும் 2ஆம் திகதி ஆரம்பமாகிறது. இதில் புதிதாக லக்னோ, சுப்பர் ஜெய்ன்ட்ஸ், குஜராத் ரைட்டன்ஸ் (அகமதாபாத்) ஆகிய 2 அணிகள் சேர்க்கப்பட்டு உள்ளன. இதனால் இந்த தொடரில் 10 அணிகள் விளையாடுகின்றன.

இந்தப் போட்டிக்கான மாபெரும் ஏலம் இன்றும் ஆரம்பமாகிறது. ஏற்கனவே 8 அணிகள் 27 வீரர்களை தக்கவைத்துக் கொண்டுள்ளன.

சென்னை சுப்பர் கிங்ஸ், டில்லி கப்பிட்டல்ஸ், கொல்கத்தா நைற் ரைடர்ஸ், மும்பை இந்தியன்ஸ் ஆகியவை தலா 4 வீரர்களையும், ராஜஸ்தான் றோயல்ஸ், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் ஆகியவை தலா 3 வீரர்களையும், பஞ்சாப் 2 வீரர்களையும் தக்க வைத்துள்ளன. புதிய அணிகளான லக்னோ, அகமதாபாத் ஆகியவை தலா 3 வீரர்களை ஏலத்துக்கு முன்பே எடுத்துக் கொண்டன. இதுவரை 10 அணிகளிலும் சேர்த்து 33 வீரர்கள் தக்கவைக்கப்பட்டுள்ளனர்.

ஐ.பி.எல். போட்டிக்கான மெகா ஏலம் பெங்களூரில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் இன்றும் நாளையும் நடக்கின்றன. இந்த ஏலப் பட்டியலில் மொத்தம் 590 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். இதில் 290 வீரர்கள் வெளிநாட்டை சேர்ந்தவர்கள். இதில் இடம்பெற்றுள்ள வீரர்களில் 228 பேர் சர்வதேச போட்டியில் விளையாடியவர்கள் மீதி உள்ள வீரர்கள் சர்வதேச போட்டியில் ஆடாத உள்ளூர் மற்றும் புதுமுக வீரர்கள்.

இந்த ஐ.பி.எல். ஏலத்தில் அதிக விலைக்கு போகும் நட்சத்திர வீரர் யார் என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்ரேயாஸ் ஐயர், டேவிட் வோர்ணர், இஷான் கிஷன், தீபக் சாஹர், ஜசன் ஹோல்டர், யசுவேந்திர சாஹல், ரபடா, ஷாருக்கான் ஆகியோர் அதிக விலைக்கு ஏலம் போகலாம் என்று கருதப்படுகின்றது.

இது தவிர, குயின்ரன் டி கொக், நிக்கோலஸ் பூரன், ஷிகர் தவான், அஸ்வின், சுரேஷ் ரெய்னா, ஷர்துல் தாகூர், அம்பதி ராயுடு, படிக்கல், குருணல் பாண்ட்யா, ஹர்ஷல் படேல், ரொபின் உத்தப்பா, தினேஷ் கார்த்திக், முகமது ஷமி ஆகியோர் மீதும் எதிர்பார்ப்பு உள்ளது.

ஒவ்வொரு அணியும் இந்தத் தொடரில் வீரர்களின் ஏலத்துக்காக 90 கோடி இந்திய ரூபாய் வரை செலவழிக்கலாம். எனினும், ஏற்கனவே தக்க வைத்த வீரர்களின் தொகை இதிலிருந்து கழிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.



## இலங்கையுடனான டெஸ்ட்

# ரஹானே புஜாராவுக்கு அணியில் இடமில்லை!

புதுடில்லி, பெப். 12

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையே டெஸ்ட் கிரிக்கெட் தொடர் வரும் 25ஆம் திகதி தொடங்குகிறது. 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட இந்த தொடரில் முதல் போட்டி வரும் 25ஆம் திகதி முதல் மார்ச் முதலாம் திகதி வரை பெங்களூரில் நடைபெறுகிறது.

இந்நிலையில், இந்த தொடரில் பங்கேற்கும் இந்திய அணியில் இஷாந்த் ஷர்மா, விருத்திமான் சஹா, அஜிங்க்யா ரஹானே மற்றும் சேதேஷ்வர் புஜாரா ஆகியோரின் பெயர்கள் பரிசீலிக்கப்படாது என இந்திய கிரிக்கெட் சபை வட்டாரங்கள் கூறின.

அணியில் இடமில்லை என்பது தேர்வாளர்களால் தனித்தனியாக நான்கு பேரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், ரஞ்சி போட்டியில் அவர்களின் செயல் திறனை பொறுத்து புஜாரா மற்றும் ரஹானேவுக்கு இந்திய அணியில் மீண்டும் வாய்ப்பு கிடைக்கலாம் என கருதப்படுகிறது.

# நெருக்கடிகளுக்கு மத்தியிலும் வெல்லும் திறனுடையவர் டோனி!

## அஸ்வின் புகழாரம்

சென்னை, பெப். 12

ஐ.பி.எல். 2022 இருபது -20 தொடர் தொடங்க வுள்ள நிலையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை எம். எஸ். டோனி வழிநடத்தி செல்வது குறித்து சுழல்பந்து வீச்சாளர் அஸ்வின் தெரிவித்துள்ளதாவது :

ஐ.பி.எல்லில் மிகவும் வெற்றிகரமான தலைவர்களில் ஒருவராக டோனி இருந்தார். கடந்த சீசன் உள்பட சென்னை சுப்பர் கிங்ஸ் 4 பட்டங்களை கைப்பற்ற டோனி அணியை வெற்றிகரமாக வழி நடத்தியுள்ளார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக பல சந்தர்ப்பங் களில் முக்கியமான பினிஷிங் ஷொட்கள் விளையாடி யதன் மூலம் கடந்த காலங்களில் டோனி அணியின் மன உறுதியை உயர்த்த உதவியுள்ளார். அவரின் தலை மைத்துவ திறமை குறித்து பேசுபவர்கள் இது குறித்து சரியாக பேசுவதில்லை.

ஐ. பி. எல். வரலாற்றில் சென்னை சுப்பர் கிங்ஸை மிகவும் நிலையான அணியாக மாற்றினார். டோனியின் அமைதியான மற்றும் கூட்டு அணுகுமுறை சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு பல அதிசயங்களை நிகழ்த்தியிருக்கிறது - என்றார்.

(ஐ)









# வவுனியா பல்கலைக்கழகத்தை திறந்து வைத்தார் ஜனாதிபதி!

வவுனியா, பெப். 12

வவுனியா பல்கலைக்கழகத்தின் புதிய கட்டடம் மற்றும் பல்கலைக்கழக கல்வெட்டு என்பவற்றை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ நேற்று திறந்து வைத்தார்.

இலங்கையின் 17 ஆவது பல்கலைக்கழகமாக கடந்த ஓகஸ்ட் மாத்தில் இருந்து செயற்படத் தொடங்கிய வவுனியா பல்கலைக்கழகத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு துணைவேந்தர் கலாநிதி ரி.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் அதிதியாக கலந்துகொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பல்கலைக்கழக பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டை திரை நீக்கம் செய்து வைத்ததுடன், பல்கலைக்கழத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மண்டபத்தையும் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், கு.திலீபன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதிகாரிகள், அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

முன்னதாக, திறப்பு விழாவுக்காக அமைக்கப்பட்ட கல்வெட்டில் தமிழ்மொழியிலான கல்வெட்டு பிரதான பாதையை நோக்கியபடி அமைக்கப்பட்டிருந்தது. எனினும், நேற்று முன்தினம் இரவு அவசர கதியில் அதில் மாற்றம் செய்யப்பட்டு, பிரதான வாயிலை நோக்கிச் சிங்கள மொழியிலான கல்வெட்டு நிறுவப்பட்டிருந்தது. அந்த கல்வெட்டே சம்பிரதாயபூர்வமாக திறக்கப்பட்டது. (அ)

# திங்கட்கிழமை வரை மின்வெட்டு இல்லை

கொழும்பு, பெப். 12

மின்சாரத்துக்கான கேள்வியை தடையின்றி பூர்த்தி செய் வதற்கு தேவையான அளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் ஜனக ரத்னாயக்க இந்த விடயத்தை தெரிவித்தார்.

எனவே, எதிர்வரும் திங்கட்கிழமை வரை மின்வெட்டை அமுல்படுத்தவேண்டிய தேவை ஏற்படமாட்டாது எனவும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும், மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துவதில் நுகர்வோர் கவனம் செலுத்தவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (அ)

# தொழில்நுட்ப சவால்களை முறியடிக்க வவுனியா பல்கலைக்கழகம் உதவும்!

## திறப்பு விழாவில் ஜனாதிபதி தெரிவிப்பு



வவுனியா, பெப். 12

**வவுனியா பல்கலைக்கழகம் ஊடாக தொழில்நுட்ப சவால்களை முறியடிப்போம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**

வவுனியா பல்கலைக்கழகத்தை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இது ஒரு விசேஷமான நாள். சுபீட்சத்தின் நோக்கு வேலைத் திட்டத்துக்கு அமைய இந்த பிரதேசத்தை கல்வி பொருளாதார ரீதியில் உயர்வடைய வைக்க வவுனியா பல்கலைக்கழகம் இன்று திறந்து வைக்கப்படுகிறது.

எனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டதுபோல நாட்டில் புதிய பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டு இந்த பிரதேச மாணவர்களிடம் கையளிக்கப்படுவதில் பெருமையடைகிறேன்.

இந்த பல்கலைக்கழகம் ஊடாக இளமாணிப் பட்டங்களை மட்டுமல்ல மேலதிக பட்டங்களையும் வேலை வாய்ப்புகளையும் வெளிநாட்டு வாய்ப்புகளையும் உருவாக்கி எமது இளைய சமுதாயத்துக்கு பெற்று கொடுக்க நாம் அனைவரும் ஒன்றிணையவேண்டும்.

இந்த பல்கலைக்கழகம் ஊடாக தொழில்நுட்ப சவால்களை முறியடித்து நாம் முன்னோக்கிச் செல்லவேண்டும்.

எதிர்வரும் காலங்களில் எமது நாட்டில் தொழில் வாய்ப்புகளை உருவாக்கக் கூடிய கல்வி முறைகளை நாம் உருவாக்க அயராது உழைக்க வேண்டும்.

எமது நாடு விவசாய நாடு என்பதால் எதிர்காலத்தில் விவசாய துறையில் பாடத் திட்டங்களை உருவாக்கி அவற்றில் பட்டங்களை பெற்று கொடுத்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புகளை பெற்று கொடுக்க பல்கலைக்கழகங்கள் முன்வரவேண்டும்.

எதிர்காலத்தில் மிக அதிகளவான மாணவர்களை பல்கலைகழகங்களுக்கு உள்ளீர்க்க எதிர்பார்த்து இருக்கிறோம்.

அதிகளவான மாணவர்கள் உயர்தரத்திலே சித்தியடைந்தாலும் அனைவரையும் பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்க முடியவில்லை எதிர்காலத்தில் இந்நிலைமை மாற்றியமைக்கப்படும்-என்றார். (அ)

# நயினாதீவு விகாரையை புனித பூமியாக பிரகடனப்படுத்தும் நிகழ்வு மார்ச் மாதம்

கொழும்பு, பெப். 12

நயினாதீவு ரஜமஹா விகாரையை புனித பூமியாக பிரகடனப்படுத்தும் சன்னஸ் பத்திரம் வழங்கும் நிகழ்வை எதிர்வரும் மார்ச் மாதம் நடத்துவதற்கு பிரதமரின் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் புனித பூமி மற்றும் தொல்லியல் தலங்களில் தற்போது நிலவும் பிரச்னைகளை தீர்த்து அவற்றிலுள்ள கல்வெட்டுகளை எதிர்கால தலைமுறையினருக்காக பாதுகாக்கவேண்டும் என பிரதமர் இதன்போது வலியுறுத்தினார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற அகில இலங்கை சாசனாரக்ஷக சபையின் கலந்துரையாடலின்போது பிரதமர் இவ் வாறு ஆலோசனை வழங்கினார்.

மேலும் அகில இலங்கை இலங்கை சாசனாரக்ஷக சபையில் தற்போது நிலவும் பிரச்னைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதமரின் செயலாளர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு பிரதமர் ஆலோசனை தெரிவித்தார்.

அறநெறி பாடசாலை கொடி தினம், அறநெறி பாடசாலை தின தேசிய நிகழ்வு மற்றும் அறநெறி பாடசாலை மாணவர்களின் திறமைக்கான தேசிய நிகழ்வு ஆகியவற்றை நடத்துவது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

அறநெறி பாடசாலை புத்தகங்களை விநியோகிப்பதற்கான போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு மாவட்ட செயலாளர்களின் உதவியை பெற்றுக் கொள்ளுமாறு பிரதமர் இதன்போது அறிவுறுத்தினார். (அ)

# வவுனியாவுக்கு வந்த ஜனாதிபதி மக்களின் குறைகளை கேட்டார்

வவுனியா, பெப். 12

வவுனியாவுக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ மக்கள் குறைகேள் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டார்.

நேற்று முற்பகல் 10 மணிக்கு வவுனியா பல்கலைக்கழகத்தின் விடுதியில் அமைந்துள்ள மைதானத்தில் விசேட உலங்கு வானூர்தியில் வந்திறங்கிய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், கு.திலீபன், மற்றும் பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர் ஜனக நந்த குமார ஆகியோர் வரவேற்றனர்.



இதனையடுத்து மைதானப் பகுதிக்கு வருகை தந்திருந்த மக்களிடம் காணிப்பிரச்னை, விவசாயப் பிரச்னை மற்றும் அவர்களது தேவைகள், கோரிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது மக்களது பிரச்னைகள் தொடர்பில் அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகளுடனும் ஜனாதிபதி கலந்துரையாடினார். (அ)

## படகுகள்...

வைத்தியசாலை மருத்துவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் போக்கு வரத்தில் பெரும் இடர்பாடுகளை எதிர் கொள்கின்றனர்.

நெடுந்தீவுக்கான போக்குவரத்துக் களில் வீதிஅபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான குமுதினி படகு மற்றும் வட தாரகை படகு என்பனவும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு சொந்தமான படகு மற்றும் தனியார் படகு பல்வேறு பட்ட படகுச் சேவைகள் இருக்கின்றன.

இதில் வீதிஅபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான குமுதினி படகு மற்றும் வட தாரகை என்பன இலவச மாக போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின் றன. இதில் தற்போது குமுதினி படகு முழுமையாக பழுதடைந்த நிலையில் திருத்தப் பணிகளை மேற்கொள்ள வேண் டிய நிலையில் மாவிலித்துறையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தற்போது பொதுமக்களுக்கான போக்குவரத்து சேவையில் வடதாரகை மட்டுமே நாளாந்தம் இரண்டு சேவை களை வழங்கி வருகின்றது அதாவது காலை 7 மணிக்கு நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்கும் பின்னர் காலை 8 மணிக்கு குறிகாட்டுவான் இலிருந்து நெடுந்தீவின் பிற்பகல் 3 மணிக்கு நெடுந் தீவில் இருந்து குறிகட்டுவான் என நாளொன்றுக்கு இரண்டு சேவைகளை வழங்குகிறது.

வட மாகாண சபையால் 2017ஆம் ஆண்டு வழங்கப்பட்டு நெடுந்தீவு பிரதேச சபையால் பராமரிக்கப்படும் நெடுந்தாரகை பயணிகள் படகு ஐந்து வருடத்துக்குள் இயங்கு நிலையை இழந்து கவனிப்பாரற்று நெடுந்தீவு துறைமுகத் தின் ஒருபக்கத்தில் நீண்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் நெடுந்தீவுக்கான போக்குவரத்து பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. எனவே நெடுந்தீவுக்கான பொதுப் போக்குவரத்து சேவைகளை உரியவாறு ஏற்படுத்தி தரு மாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (ஐ)

## நாட்டில்...

பூசியை வழங்கியுள்ளோம் என்று சுகா தாரத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக் வெல தெரிவித்துள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் செயலாளருடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித் தார்.

கோவிட் - 19 கட்டுப்படுத்தல் நடவ டிக்கைகளில் ஏனைய நாடுகளில் மக்கள் தமது தடுப்பூசியை வழங்குமாறு அரசாங் கத்திடம் கோரிக்கை விடுத்துக் கொண் டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில், இலங்கை யில் சுகாதார தரப்பினர் மக்கள் பின்னால் சென்று தடுப்பூசியை வழங்குவதற்கு நட வடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்ற னர்.

இலங்கையில் கோவிட் கட்டுப்படுத் தலில் மூன்று கட்ட தடுப்பூசிகளையும் துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை பிரதான காரணி யாகும்.

முதல் மற்றும் இரண்டாம் கட்ட தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் காண்பித்த ஆர்வம் , மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள் வதில் பல்வேறு காரணிகளால் குறை வடைந்துள்ளது.

கோவிட் தொற்றாளர்கள் மற்றும் மரணங்களின் எண்ணிக்கை குறைவடைந் தமையால் மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் பொறுப் பின்றி செயற்படுகின்றனர். எனினும், தற்போது மீண்டும் தொற்றாளர் எண் ணிக்கை அதிகரித்துள்ளமையால் , மக் கள் பொறுப்புடன் செயல்பட வேண்டி யது அவசியமாகும்.

எவ்வாறிருப்பினும் எதிர்வரும் ஒரிரு மாதங்களுக்குள் திட்டமிடப்பட்டுள்ள சனத்தொகைக்கு மூன்றாம் கட்ட தடுப் பூசி வழங்கும் பணிகள் நிறைவு செய்யப் படும். சில நாடுகள் இன்னும் தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பிக்காத நிலை யிலும் கூட , இலங்கையில் 95 சதவீத மானோருக்கு, குறிப்பாக சிறுவர்களில் 98 சதவீதமானோருக்கு தடுப்பூசியை வழங்கியுள்ளது.

மக்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதை இலகுபடுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் பல தடுப்பூசி வழங் கும் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ள தோடு , நடமாடும் தடுப்பூசி சேவை களும் முன்னெடுக்கப்படுகின்றன - என் றார். (ஐ)

## ஜனாதிபதிக்கு...

பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் வழிமறித்து தடுத்து நிறுத் தினர்.

இதனால் ஆர்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டதுடன், குழப்பநிலை தோன்றி யது.

கொலைக்குற்றவாளியே நாட்டின் ஜனாதிபதியாக இருக்கிறார். அவர்களை நம்பியே நாம் எமது பிள்ளைகளை ஒப் படைத்தோம். எனவே அவரிடம் நாம் சில கேள்விகளை கேட்கவேண்டும். அதற்கு அனுமதி வழங்குமாறு போராட் டக்காரர்கள் தெரிவித்தபோதும் அதனை பொருட்படுத்தாத பொலிஸார் அவர் களை முன்செல்ல அனுமதிக்கவில்லை. இதனால் குறித்த பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து ஜனாதிபதியின் பாது காப்புப் பிரிவின் அதிகாரிகள் குறித்த போராட்டக்காரர்களுடன் கலந்துரை யாடியதுடன் இருவரை மாத்திரம் வந்து ஜனாதிபதியை சந்திக்குமாறு கோரினர்.

அதற்கு எதிர்ப்பு தெரிவித்த அவர்கள், நாம் அவரை சந்திக்கவரவில்லை. எங்கள் அனைவரையும் முன்செல்ல அனுமதிக்கு மாறு கோரியதுடன் கொலைக்குற்ற வாளி எப்படி நீதிபதியாக மாறமுடியும்- என்றனர்.

இருமணி நேரத்துக்கும் மேலாக குறித்த பகுதியில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் அவர்களை வழிமறித்து முன்செல்ல முடியாதவாறு நின்றனர். இதனை அடுத்து போராட்டக் காரர்கள் திரும்பிச்சென்றனர். (அ)

## இராவணன்...

பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

இலங்கை மண்ணன் இராவணன் தொடர் பாக உறுதியான வரலாற்றுச் சான்றுகள் இல்லாத போதிலும், முறை சார்ந்த ஆய் வொன்றின் மூலம் அவர் தொடர்பாக நாட்டு மக்களின் மனப்பாங்கை மேம் படுத்துவதற்கும் மன்னன் இராவணனுக்கு இருந்த அறிவை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கும், இலங்கை வரலாற் றில் மறைந்து போயுள்ள அத்தியாய மொன்றை வெளிக்கொண்டு வருவதற் கும் இயலுமாயுள்ளதால் புத்திஜீவிகள் குழுவான்றின் மூலம் மன்னன் இராவ ணன் தொடர்பான ஆய்வான்று மேற் கொள்ளப்படுதல் வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இதயபூமியை...

யில் கையகப்படுத்தும் நோக்கோடு நில அளவீடு மேற்கொள்ளப்பட்டு சுவீகரிப் பதற்கான ஏற்பாடுகள் மிக தீவிரமாக அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே சிங்கள குடியேற்றங்களா லும் ,இராணுவ ஆக்கிரமிப்பாலும் மகா வலி எல் வலயத்தாலும் , வன ஜீவராசி கள் திணைக்களம் , வளவள திணைக்க ளம் , தொல்லியல் திணைக்களம், போன்ற அரச இயந்திரங்களின் திட்டமிட்ட ஆக் கிரமிப்பால் இருப்பு கேள்விக்குள்ளாகி வரும் தமிழ் மக்களின் எல்லை கிராமங் களில் மேலதிகமாக கனிய மணல் கூட்டு தாபனத்துக்கு என மிகுதி நிலங்களையும் அபகரிக்கும் வேலையை அரசு மிக திட்ட மிட்டு முன்னெடுத்துவருகின்றது.

எனவே தமிழ் மக்களுக்கு சொந்தமான இந்த நிலங்களை அபகரிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த எதிர்ப்பு போராட்டம் நடத்தப்படுவதாக கொக்கிளாய் மக்கள் தெரிவித்தனர். (ஐ)



# குமாரபுரம் படுகொலையின் நினைவேந்தல் அனுஷ்டிப்பு!

திருகோணமலை - குமாரபுரம் படுகொலையின் 26 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

குமாரபுரம் சித்திவிநாயகர் ஆலயத்தில் பூஜை வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டி ருந்தன. நினைவுத்தூபியில் தீபம் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

குமாரபுரம் பகுதியில் 1996 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 ஆம் திகதி 26 பேர் இராணு வத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்தில் 39 பேர் காயமடைந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பிலான வழக்கு நீண்டகாலமாக நடைபெற்றதுடன், சாட்சியங்களில் காணப்பட்ட முரண்பாடுகள் காரணமாக பிரதிவாதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.



# இந்திய நிதி அமைச்சரை சந்தித்தார் மொறகொட!

புதுடில்லி, பெப். 12

இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ் தானிகர் மிலிந்த மொறகொட, இந்தியா வின் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை புதுடில்லியில் நேற்று வெள்ளிக்கிழமை சந்தித்தார்.

அத்தியாவசிய பொருட்களை கொள் வனவு செய்வதற்காக இந்தியாவால் வழங்கப்படவுள்ள 100 கோடி டொலர் கள் கடன் சலுகை தொடர்பில் இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட் டன என்று உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, எதிர்வரும் நாட்களில் புதுடில்லிக்கு மேற்கொள்ளவுள்ள விஜயம் தொடர் பிலும் இங்கு கலந்துரையாடப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த தீர்மானம் மிக்க நாட்களில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கு வதற்கு தனிப்பட்ட ரீதியிலும் ஆர்வம் கொண்டிருப்பது தொடர்பில் இந்திய நிதி அமைச்சருக்கு உயர்ஸ்தானிகர் நன்றி தெரிவித்தார். (ஐ)

## தொற்றுக்கு...

ஆண்களும், ஒரு பெண்ணுமாக 5 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 14 ஆண்களும் 12 பெண்களுமாக 26 பேரும் உயிரிழந்தனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 754 ஆக உயர்வடைந்துள்ளதமை குறிப்பிடத் தக்கது. (ஐ)

## எந்த நிதி...

தொடர்ந்தும் உன்னிப்பாக அவதா னித்து வருவதாக வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இலங்கையி லுள்ள சர்வதேச நாணய நிதிய குழுவின் நான்கா வது ஆலோசனை பகுதி மாத்திரமே தற் போது நிறைவடைந்துள்ளது. இந்த ஆலோசனைகள் தொடர்பில் இந்த மாத இறுதியில் நிர்வாகக் குழு மட்டத்தில் கலந்துரையாடப்படும். எவ்வாறிருப்பி னும் இலங்கையிடமிருந்து இதுவரை யில் எவ்வித கோரிக்கைகளும் எமக்கு கிடைக்கப் பெறவில்லை.

கோரிக்கை விடுக்கப்பட்டால் அது குறித்து பேச்சுவார்த்தைகளை முன்னெ டுப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் தயா ராகவே உள்ளது என்றும் ஜெரி ரைஸ் கூறினார். (ஐ)

## அத்தியாவசிய...

மற்றும் சிமெந்து ஆகியவற்றுக்கு சிறிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (ஐ)

## யாழ். தேர்தல்...

யுள்ளது.

2020ஆம் ஆண்டு வாக்காளர் பதிவின்படி 7ஆக இருந்த யாழ். மாவட்ட பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை 2021ஆம் ஆண்டில் 6ஆகக் குறைவடைந்தது.

இந்த நிலையில், தற்போது 2022 வாக்காளர் பதிவின்படி மீண்டும் யாழ்ப் பாணம் மாவட்டத்தின் பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை 7ஆக அதி கரித்துள்ளது.

இதேவேளை, கமபஹா மாவட்டத் தின் பாராளுமன்ற உறுப்புரிமை ஒன் றால் குறைவடைந்துள்ளது என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# மீனவர்களின் பிரச்னைக்கு தீர்வு காண புத்திஜீவிகளின் ஒத்துழைப்பு வேண்டும்

## யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 12

**இலங்கை-இந்திய மீனவர்களின் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு புத்தி ஜீவிகள், சிவில் சமூகங்களின் ஒத்துழைப்பு தேவை என யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் அன்ன ராசா தெரிவித்தார்.**

வடக்கில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட நான்கு மாவட்டங்களை சேர்ந்த மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கிடையில் விசேட கலந்துரையாடல் நேற்று யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளன அலுவலகத்தில் இடம்பெற்றது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மீனவர்களின் பிரச்னைகளை சரியாக ஆராய்ந்து அதனை ராஜதந்திர ரீதியில் நகர்த்தவேண்டிய தேவையுள்ளது

அந்த விடயம் தொடர்பில் கடந்த வாரமும் யாழ்.மாவட்ட ரீதியில் கலந்துரையாடி இருந்தோம். அதேபோல இன்றைய தினம் வடமாகாணத்துக்குட்பட்ட நான்கு மீனவர் சங்கப் பிரதிநிதிகளை அழைத்து கலந்துரையாடியுள்ளோம்.

இந்த கலந்துரையாடலின் அடிப்படையிலே 4 மாவட்டங்களைச் சேர்ந்த புத்திஜீவிகளை எங்களுக்கு ஆதரவு தருமாறும் ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்வதற்கு எங்களோடு இணைந்து செயல்பட வருமாறும் நாங்கள் கோரியிருக்கின்றோம்.




மீனவர்களிடையே பிளவை ஏற்படுத்தாது நமது ஒற்றுமையை வலுப்படுத்தி நாம் ஒற்றுமையாக தீர்வை நோக்கி நகர்வதற்கு அரசியல் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டும். கட்சி பேதமின்றி மீனவர்களுக்குள்ள பிரச்னைகளை ஆக்கபூர்வமாக ஒரே குடையின் கீழ் கையாளவேண்டும்.

இலங்கை-இந்திய மீனவர்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு 4 மாவட்டங்களைச் சேர்ந்த புத்திஜீவிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் எம்முடன் இணைந்து செயற்படுமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.

எதிர்காலத்தில் மீனவர்கள் வீதிகளில் இறங்கிப் போராடாமல் இருப்பதற்கு 4 மாவட்டங்களைச் சேர்ந்த அனைத்து சிவில் சமூகங்கள், புத்திஜீவிகளின் ஒத்துழைப்பு கட்டாயம் அவசியம்.

யாழ்ப்பாணம், கொழும்பில் உள்ள இந்திய தூதரகங்களின் வாக்குறுதிகளை நாங்கள் நம்ப முடியாது. அவர்களின் வாக்குறுதிகள் சரியாக நடைமுறைப்படுத்தப்பட்டால் இந்த இந்திய-இலங்கை மீனவர்கள் பிரச்னை ஐந்து வருடங்களுக்கு முன்னரே தீர்க்கப்பட்டு இருக்கும். ஆனால் இலங்கையில் உள்ள இந்திய தூதரகங்களின் உறுதிமொழியினால் எமக்கு எந்தவித பயனும் கிடைக்காது-என்றார். (அ-03)

# 373 பேர் பூரண குணம்

கொழும்பு, பெப். 12

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி சிகிச்சைப் பெற்றுவந்த மேலும் 373 பேர் பூரண குணமடைந்து மருத்துவமனையில் இருந்து வெளியேறியுள்ளதாக தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

## மரண அறிவித்தல்

பிறப்பு 06 - 08 - 1982



இறப்பு 06 - 02 - 2022

### றொனால்ட் உமேஷனன் கிருபால்

(உமேஷ்)

யாழ். வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், கனடா Guelph ஐ வதிவிடமாகவும் கொண்ட றொனால்ட் உமேஷனன் கிருபால் அவர்கள் 06.02.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி (முன்னம்பிட்டி விதானையார்) – பவளக்கொடிமாலை தம்பதியரின் மற்றும் அழகையா – ஞானம்மா தம்பதியரின் அன்புப் பேரனும், கிருபால் சுப்புலட்சுமி (சுசி) தம்பதியரின் அன்பு மகனும், கிருபாகரன், காலஞ்சென்ற ஜெயந்தி தம்பதியரின் அன்பு மருமகனும், பிரியதர்சினி அவர்களின் அன்புக் கணவரும், நிரஞ்சலின் (துர்ஷி), அன்ரனி சுதர்சன்(சுதா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும்,சிந்தியா, பிரகதி, திலக்சனா ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிலா, நிஷா, நிதி ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,வெரோணிக்கா ஹாசினி, ரைலி பிரபாகரன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

பார்வைக்கு :
Saturday, 12 Feb 2022 5:00 PM - 9:00 PM
St John’s Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

தகனம் :
Sunday, 13 Feb 2022 9:00 AM - 12:00 PM
St John’s Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**பிரேம் - மைத்துனர்**
**Mobile : +16472195020**

தகவல்:
**குடும்பத்தினர்**







# சிட்னி மைதான நுழைவாயில் முன்பாக புலம்பெயர் தமிழர்கள் சிலர் போராட்டம்!

சிட்னி, பெப். 12

இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அணிக்களுக்கிடையிலான முதலாவது இருபதுக்கு இருபது போட்டி இடம்பெற்ற மைதானத்துக்கு அருகில் புலம்பெயர் தமிழர்கள் சிலரால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அவர்கள் சிட்னி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் நுழைவாயிலுக்கு முன்பாக சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர் என அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

கிரிக்கெட் போட்டிகளை விளையாடி மகிழ்ந்தாலும், கடந்த காலங்களில் தமிழர்கள் மீது நடத் தப்பட்ட படுகொலைகளை மறந்துவிட முடியாது என அவர்கள் குறிப் பிட்டனர் எனவும் அவுஸ்திரேலிய ஊடகங்கள் கூறியுள்ளன.




இலங்கை அணி அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடும் சந் தர்ப்பங்களின் போது இவ்வாறான எதிர்ப்புப் போராட்டங்கள் அவ்வப் போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைககள் காரணமாக, இலங்கை வீரர்களுக்கு கூடுதல் பாதுகாப்பை வழங்க சில நாடுகள் நடவடிக்கை எடுத்திருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் - மறு ஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : WEEK END MOVIE- ஆறு
4.30 மணி : மனிதனின் மறுபக்கம்




5.00 மணி : அந்தி மந்தாரை
6.00 மணி : - எதுசரி எதுபிழை

**இரவு**

7.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு



7.30 மணி: டான் சினி மரதன் குறும்பட போட்டி நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி: டான் பட்டிமன்றம்-காதலர் தின சிறப்பு



10.00 மணி : நெற்றிக்கண்

**DAN COMEDY HD**

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**சிவம் ரிவி**

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

**Pirai Television**

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு